பக்கங்கள்-16 22,கார்த்திகை.2020 விலை-30.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182

# தினப்புயல்

PTN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்



புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.

T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -322



## நவம்பர் 27 மாவீரர் தினம்

## தேசியத்தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை



## தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆமை வேக நகர்வுகள்



## கோட்டபாய அரசு தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்று தருமா?

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆமை வேக நகர்வுகள்



இன்றைய அரசியல் சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் நகர்வுகள் ஆமை வேகத்தில் நகர்த்தப்பட்டாலும் தமிழினத்தின் விடுதலைக்கான ஒரு மைல் கல்லாகவே அது அமையப்பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களாக அங்கம் வகித்த சிறிநேசன், கோடீஸ்வரன் போன்றவர்களும் வன்னியில் சிவமோகன், சாந்தி சிறிஸ்கந்தராசா, யாழ்ப்பாணத்தில் சரவணபவன், மாவை சேனாதிராஜா போன்றவர்கள் பாராளுமன்ற தேர்தலில் தெரிவு செய்யப்படாத நிலையில் அவர்களுடைய அரசியலும் தற்பொழுது நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்னடைவை சந்தித்துக் கொண்டிருப்பதாக பலர் கூறினாலும் அபிவிருத்தி அரசியல் என்ற போர்வையில் அரசாங்கம் தமிழினத்தை ஏமாற்றி வருகின்றது.

இதில் ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளும் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைக்கு எதிரானவர்களும் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்படுவது என்பது தமிழினத்தின் இருப்புக்கு ஆபத்தை விளைவிக்கின்ற ஒரு செயற்பாடாகவே அமையப்பெறுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்டது என்பது அனைவருக்கும் தெரியும். ஆயுத ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பலம் பொருந்தியவர்களாகவே தமிழீழ விடுதலைப்புலிகள் திகழ்ந்தார்கள். இன்று அதன் அரசியல் எச்சங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுவதற்கு அரசாங்கம் விரும்பவில்லை. 1000 பொய்களை சொல்லியாவது அரசியல் அரங்கிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதைக்கும் நடவடிக்கைகளையே அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொலை செய்யப்பட்ட போது அப்போதிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அப்பகுதிக்கு சென்று அநியாயமாக கொலை செய்யப்படுகின்ற மக்களுக்காக குரல்கொடுக்க முடியாமல் போய்விட்டது. அக்கால கட்டத்தில் அவ் குரல்கள் நசுக்கப்பட்டது. கிளைமோர் தாக்குதல்களில் கொலை செய்யப்பட்டார்கள். அரசாங்கம் திட்டமிட்ட முறையில் தமிழ் மக்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டிருந்தது. இருந்தும் ஜனநாயக ரீதியில் தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயணித்து வருகின்றது.

22 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்பொழுது 10 வரையிலான பாராளுமன்ற உறுப்பினர்களையே கொண்டுள்ளது. 12 பாராளுமன்ற உறுப்பினர்களை இழந்துள்ளமையானது அரசியல் வரலாற்றில் ஒரு பின்னடைவை சந்தித்துள்ளது எனலாம். ஆனால் இந்த பின்னடைவுகள் ஒவ்வொன்றையும் வெற்றிப் படிக்கட்டுகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செதுக்கி வருகின்ற காலம் தோன்றியுள்ளது என்றே கூறவேண்டும். மக்கள் தற்பொழுது இருக்கக்கூடிய அரசாங்கத்தில் நம்பிக்கை கொள்ளவில்லை. இவ் அரசாங்கம் தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டத்தை தரும் என்ற நம்பிக்கையும் இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கக்கூடிய ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அரச கைக்கூலிகளாக செயற்படுகின்ற விதம், அதனால் அவர்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் என்றே கூற வேண்டும்.

பூகோள அரசியல் மாற்றத்திற்கு அமையவே இலங்கை அரசும் மாற்றம் பெற்று வருகின்றது. அந்த அரசியலை நுட்பமான முறையில் கொண்டு செல்லவேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கிறது. தமிழ்க் கட்சிகளுக்கிடையே பிரிவினைகள் உருவாக்கப்பட்டு வருகின்ற இந்த நிலையில் அதன் ஒற்றுமையை சீர்குலைக்காது, அனைவரையும் இணைத்துக்கொண்டு பயணிக்கவேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இருக்கின்றது.

அரசாங்கமோ, எதிர் கட்சியோ அன்று தொடக்கம் இன்று வரை தமிழ்த் தரப்பினுடைய தவறுகளை சுட்டிக்காட்டுகின்றார்கள் அல்லது செயற்பாடுகளை மழுங்கடிக்கின்ற காரியங்களில் செயற்படுகின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமை பெற்றுவிட்டால் விடுதலைப்புலிகள் ஆயுதப்போராட்டத்தினால்வடகிழக்கை பெற்றுக்கொண்டுவிட்டார்கள் என்று சர்வதேச ரீதியாக அனைவராலும் பேசப்படும். ஆனால் இவர்கள் அகிம்சை ரீதியாக பெற்றுவிடுவார்கள் என்ற பயம் அரசாங்கத்திற்கு இன்னும் இருக்கிறது. இதைவிடவும் தமிழ் அரசியல் கட்சிகள் பலவும் அரச கைக்கூலிகளாக செயற்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதைக்கும் நோக்கில் செயற்படுகின்றனர். இவையனைத்தையும் தாண்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சி ஒற்றுமைகளை பலப்படுத்திக்கொண்டு தமிழினத்தை காப்பாற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

தமிழ்க் கட்சிகளுக்குள் பிளவுகள் ஏற்பட்டாலும் பின்னர் ஒடுக்குமுறை என்றவொன்று தமிழ் மக்கள் மீது திணிக்கப்படுகின்றபொழுது அதனை கை கட்டி வேடிக்கை பார்க்க முடியாது. ஆகவே விரைந்து செயற்படவேண்டிய தேவை இன்றைய காலகட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆமை வேகத்தில் நகர்ந்தாலும் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற இலக்கை அடையும் வரை அவர்கள் பயணித்துக் கொண்டிருப்பார்கள் என்பதே இன்றைய நடைமுறை அரசியலின் யதார்த்தம். அதற்கான ஒத்துழைப்பை தமிழ் பேசும் மக்களாகிய நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்குவதனூடாகவே அரசாங்கத்தின் நில ஆக்கிரமிப்பு, கலை கலாச்சாரம், தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும், பாதுகாக்க முடியும். ஆகவே தமிழ் மக்களின் ஒற்றுமையே பலம் என்பதனையே நாம் இங்கு சுட்டிக்காட்டுகின்றோம்.

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## தொடர்ச்சியாக தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் அடக்குமுறைகள்

இலங்கையில் வடகிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையாக வாழும் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக மாறி மாறி இலங்கையை ஆட்சி செய்துவரும் சிங்கள ஆட்சியாளர்களால் நன்கு திட்டமிட்டு அடக்கியொடுக்கப்படும் சூழலுக்குள் தள்ளப்பட்டே வருகின்றனர். இந்நாட்டில் மூவின மக்கள் வாழ்கின்ற போதிலும் தமிழினம் தான் சொல்லொனாத் துயரங்களை தொடர்ந்தும் சந்தித்தே வருகின்றது. இன்றுவரை சிங்கள ஆட்சியாளர்களால் தமிழ் மக்கள் இலக்குவைக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டே வருகின்றார்கள். திணிக்கப்பட்ட அடக்குமுறைகளின் வெளிப்பாடே ஆயுதப்போராட்டம் என்பது அனைவருக்கும் தெரியும். தற்போது ஆயுதப்போராட்டமும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அஹிம்சை ரீதியான போராட்டங்கள் மாத்திரமே தமிழினத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. விடுதலை நோக்கி அன்று ஆயுதம் ஏந்திப் போராடத் தலைப்பட்ட தமிழினம், யுத்தம் நிறைவடைந்து பத்து ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையிலும் அதே நோக்கத்துடன் அஹிம்சை ரீதியாகப் போராடி வருகின்றது. தமிழினத்தின் விடுதலைக்காக இறுதிவரை போராடியவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் தான். அதில் மாற்றுக்கருத்தில்லை. ஒரு இனத்தின் விடுதலைக்காகப் போராடுகின்றவர்களுக்கு ஆதரவு கொடுப்பதற்கும், அவ் வீரர்கள் இப்போராட்டத்தில் மரணிக்கின்றபோது அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கும் குறித்த இனத்தின் மக்களுக்கு முழு அதிகாரமும் உண்டு. அதனை தடுப்பதற்கு அல்லது அது தொடர்பாக விமர்சிப்பதற்கு, தடை செய்யவேண்டும் என்கிற கட்டளைகளை இடுவதற்கு எவருக்கும் அதிகாரம் இல்லை. ஏனெனில் விடுதலைப்புலிகள் ஆயுதமேந்துவதற்கு காரணமாக இருந்ததே இந்த சிங்கள ஆட்சியாளர்கள் தான் என்பதை அனைவரும் நினைவில் வைத்திருக்கவேண்டும். அவர்கள் விரும்பி தம் தோள்களில் ஆயுதந்தரித்து போராடவில்லை. அடக்குமுறைகள் அரசினால் திணிக்கப்பட்டது என்பது சிங்கள ஆட்சியாளர்களுக்குத் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை. நீங்கள் கூறுவதைப்போல விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று தடைசெய்வதற்கு காரணகர்த்தாக்களாக இருந்ததே நீங்கள் தான் என்கிற போது, விடுதலைப்புலிகளுடனான யுத்தம் நிறைவடைந்த கடந்த பத்து ஆண்டு கால இந்த இடைவெளியில் அவர்களுக்கு அஞ்சலி செலுத்த அரசு தொடர்ந்தும் தடைவிதித்து வருவது குறித்து தமிழினம் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

நாம் தமிழினத்தின் போராட்டத்தை மழுங்கடித்துவிட்டோம், ஆயுதமேந்திய விடுதலைப்புலிகள் அமைப்பை முற்றாக அழித்துவிட்டோம் என மார்தட்டிக் கொண்டாடும் சிங்கள அரசு, எமது தாயக மண்ணுக்காக உயிர்நீத்த வீர மறவர்களுக்கு அஞ்சலி செலுத்த இன்றும் பயம் கொள்வது ஏன்? முந்திக்கொண்டு பொலிசார் நீதிமன்றங்களின் தடைகளைப் பெறுவது ஏன்? எதற்காக இன்றும் நீங்கள் அச்சம் கொள்கின்றீர்கள் என ஆற அமர ஓரிடத்தில் அமர்ந்து சிந்தித்துப் பார்த்ததுண்டா? உலக நாடுகளின், உங்கள் அரசுகளின் சிந்தனைகளுக்கு அப்பால் தமிழினத்தின் விடுதலை குறித்தும், திட்டமிட்டு உங்களால் எம் இனத்தின் மீது திணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அடக்குமுறைகள் குறித்தும் மிகத் துல்லியமாக கணித்து பல கட்டமைப்புக்களை நிறுவி திறம்பட செயற்பட்டவர்கள் தமிழர்கள். இன்றும் மிகக் கவனமாக உங்கள் அரச தரப்பினரால் கண் காணிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறோம் என்றால், நாங்கள் உயிர்ப்புடன் தான் இருக்கிறோம் என்பதை நினைவில் வைத்திருங்கள். நாம் பொது வெளியில் தீபம் ஏற்றி தமிழினத்தின் விடுதலைக்காக தம்முயிரை நீத்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதை உங்களது வெள்ளைக் காகிதம் மூலமாகத் தடுத்திருக்கலாம் ஆனால் எமது மனதால் அவர்களுக்காக அஞ்சலி செலுத்தப்போவதை என்ன செய்யப்போகிறீர்கள். அடக்குமுறைகள் மீண்டும் மீண்டும் திணிக்கப்படுகின்ற போது வன்முறைகள் உருவாகும். இனங்களுக்கிடையில் முறுகல் நிலை தோன்றுமேயொழிய இந்நாடு சுபீட்சமான பாதை நோக்கிப் பயணிக்காது என்பதை நாங்கள் சொல்லி நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டியதில்லை என்பதை மட்டும் மீண்டும் ஒருமுறை வலியுறுத்திக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**125**

இதுதவிர, மக்கள் படையுடன் போரைத் தொடுப்பதற்கு எதிரிக்கு இன்றியமையாத இராணுவப் பொருட்களை உற்பத்திசெய்கின்ற தொழிற்சாலைகள், பொறிகள், இயந்திரத் தொழிற்சாலைகள் போன்றவற்றையும் அழிக்கவேண்டும்.

இராணுவத் (இயந்திரத்) தொழில் கெரில்லா அமைப்பினது மிக உயர் வளர்ச்சியின் பெறுபேறாவே கெரில்லா இராணுவத்திற்குள் இராணுவத் தொழில் தோற்றம் பெறுகின்றது. தவிர கெரில்லாப் படைப்பிரிவு சாத்தியமான புவியியல் சூழ்நிலையில் செயற்படுகின்றதென்பதையும் அது சுட்டிக்காட்டுகின்றது. விடுவிக்கப்பட்ட வலயங்கள் தோன்றும் போதும் விநியோக மையங்கள் இன்னமும் எதிரியின் கடின கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற போதும் அவசியம் வெவ்வேறு வகையான தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். இவற்றில் மிக முக்கியமானவையாக் காலணி உற்பத்திச்சாலையும் தோற்பொருள் உற்பத்திச்சாலையும் விளங்குகின்றன. கூடியளவு கூரான கற்கள், முள் வளரிகள் போன்றவற்றைக் கொண்ட மலைப்பாங்கான பிரதேசங்களில் காலணியின்றிக் கெரில்லாப் படைப்பிரிவால் நகர முடியாது. இவ்வாறான சூழ்நிலையில் அப்பிரதேச மக்கள் மாத்திரமே காலணியின்றிச் சமாளித்துக்கொள்கின்றார்கள்.

ஆனாலும் எல்லோராலும் அப்படி இருக்க முடிவதில்லை. ஏனைய வீரர்கள் அவசியம் காலணி அணிந்திருக்க வேண்டும். காலணித் தொழிற்சாலை இரண்டு வகையானதாக இருக்கலாம். ஒன்றில் காலணிகளைத் திருத்துதல் மற்றையதில் புதிய திடமான காலணியைத் தயாரித்தல். இத் தொழிற்சாலைகள் காலணிகளைத் தயாரிப்பதற்கு அவசியம் தேவையான கருவிகளையும் உபகரணங்களையும் கொண்டிருக்க வேண்டும். இவ்வுபகரணங்களை அப்பிரதேசத் தொழிலாளர்களிடம் இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம். குறைந்தளவு முக்கியத்துவத்தையே தோற்பொருள் உற்பத்திச்சாலைகள் கொண்டிருக்கின்றன. இவற்றில் பின்வரும் பொருட்களை உற்பத்தி செய்யலாம். எடுத்துக்காட்டா ரவைகாவி (ரவைக்கூடுகாவி – கோல்சர்) அல்லது பொருட்பை போன்றன. இவற்றைத் தார்ச்சீலையால் அல்லது தோலால் தயாரிக்கலாம். இவைமிகமுக்கியமான பொருட்களாக இல்லாவிட்டாலுங்கூட கூடிய வசதியைத் தருகின்றன. இது தவிர கெரில்லாக்கள் மத்தியில் தமக்குத் தேவையான பொருட்களைத் தாங்களே விநியோகிக்கலாம் என்ற திருப்தியுணர்வும் தோற்றுவிக்கப்படுகின்றது.

ஆயுதத் திருத்தச்சாலை கெரில்லாப் படைப்பிரிவில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இங்கு பின்வரும் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. ஆயுதத்தில் ஏதாவதொரு பழுதடைந்த பாகத்தைத் திருத்துதல், படைப்பிரிவிலிருக்கின்ற சுரிசுடு கலனையும் ஏனைய ஆயுதங்களையும் திருத்துதல் சில வகைச் சுயதயாரிப்புச் சமராயுதங்களையும் வெவ்வேறு வகை யான கண்ணிகளையும் தயாரித்தல் போன்றனவே அவையாகும். சாத்தியமான சூழ்நிலை போதுமானளவு இருக்கின்றபோது இவ்வாறான திருத்தச்சாலைகளில் கரிமருந்தையும் தயாரிக்கத் தொடங்கலாம். விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் வெடிபொருட்களையும் வெடிப்பிகளையும் தயாரிக்கும் வசதியிருந்தால் இது மிகவும் தரமான பெறுபேறுகளைத் தருகின்றது. இது மிக முக்கியமானதாகும். ஏனெனில் இவை கண்ணித் தயாரிப்பிற்கு வழிவகுக்கின்றன. இவற்றின் உதவியுடன் எதிரியின் பெருந்தெருக்களை அழிக்கலாம். கெரில்லாக்களின் வாழ்வில் மிகப்பெரிய பங்கு வகிக்கின்ற ஏனைய தொழிற்சாலைகளும் இருக்கின்றன. இவற்றில் எடுத்துக்காட்டாகக் கொல்லவேலைப்பட்டடை தரவேலைச்சாலை போன்றன உள்ளடக்கப்படுகின்றன.



பட்டடையில் கோவேறு கழுதைக்குப் பயன்படுத்தும் சேணத்திற்கானதும் லாடத்திற்கானதுமான உருக்குப் பாகங்கள் தயாரிக்கப்படுகின்றன. தகரவேலைச் சாலையில் வெண்கலத்தினாலான பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. தகரவேலைச் சாலையில் வெண்கலததினாலான பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றில் பிரதானமானவையாகத்தட்டுக்களும் குறிப்பாகத் தண்ணீர்ச் சாடிளும் விளங்குகின்றன. தகரவேலைச் சாலையுடன் சேர்த்து சிறிய வார்ப்புத தொழிற்சாலைகளையும் உருவாக்கலாம். வார்க்கப்பட்ட உலோகம் கையெறிகுண்டுத் தயாரிப்பிற்குச் செல்கின்றது. வெடித்திரிபொருத்தப்பட்ட கையெறிகுண்டுகள் கணிசமான அளவு கெரில்லாப் படைப்பிரிவின் படைக்கலன்களைப்பூர்த்தியாக்குகின்றன.

திருத்த – கட்டமானவேலைக் குழுவைத் தோற்றுவிப்பது சாலச்சிறந்தது. இக்குழு வெவ்வேறு வகையான பணிகளைச் செய்யும் வீரர்கள் இதனை "தொண்டாற்றும் பற்றறி" என அழைப்பார்கள். இந்தப் பற்றறி கெரில்லாக்களின் பல்வேறான தேவைகளை ஒப்பீட்டளவில் வேகமாகத் திருப்திப்படுத்துகின்றது. தொடர்புகளையும் செய்திப் பரிமாற்றத்தையும் ஒழுங்கமைக்கின்ற விடயங்களைக் குறித்த ஒரு நபர் நிர்வகிக்கின்றார். அவர் தன்னிடத்தில் பரப்புரைக்கான மற்றும் வெளியுலகுடன் தொடர்பை மேற்கொள்வதற்கான சாதனங்களை வைத்திருப்பார்.

குறிப்பாகப் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு இன்றியமையாத வானொலி தொலைபேசி செய்தி பரிமாறும் வழிகள் உள்ளூர் நிர்வாகம் போன்றனவே அவையாகும். சமர் நடவடிக்கைகளின் போது என்பொழுதும்கெரில்லாக்கள்எதிரியின் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர் என்பதனை நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே கூடுதலான ஆட்களின் தலைவிதி முற்கூட்டிய தொடர்பிலேயே தங்கியிருக்கின்றது. இராணுவத்தின் தேவையைத் திருப்திப்படுத்துவதற்காப் புகையிலைத் தொழிற்காலைகள் உருவாக்கப்படுகின்றன. இவற்றிற்கான மூலப்பொருட்கள் சில பிரசேதங்களில் கொள்வனவு செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட பிரதேசத்திற்குக் கொண்டுவரப்பட்டு அங்கே பயன்படுத்தக்கூடிய தரத்திற்கு மாற்றப்படுகின்றன.

பிரதான துறையாகத் தோல் பதனிடல் விளங்குகின்றது. தோல் பதனிடும் தொழிற்சாலை மிக இலகுவானதாக இருக்க வேண்டும். கெரில்லாப் படைப்பிரிவு இருக்கின்ற சூழ்நிலையில் பயண்டுத்தக்கூடிய வகையில் இவற்றைச் சகல இடங்ளிலும் உருவாக்கலாம். தோல் பதனிடுவதற்குச் சீமெந்தினாலான கட்டுமானங்கள் சில தேவைப்படுகின்றன. அத்துடன் குறிப்பாகக் கூடுதலான அளவு உப்பும் தேவைப்படுகின்றது. இருந்த போதும் காலணிகள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்களைத் தருகின்றபடியால் இத்தொழில் கூடியளவு முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றது.

7.பரம்பரை

வேவ்வேறு பரப்புரை முறையமைப்புக்களைப் பயன்படுத்தி மக்களிடத்தில் புரட்சிக் கொள்கைகளை அவசியம் விரிவாகப் பரப்ப வேண்டும். இதற்காகப் பாரிய ஒழுங்குபடுத்தல் வேலை மேற்கொள்ளப்படவேண்டும்.நாட்டின் சகல பிரதேசங்களும் பரப்புரையின் ஆதிக்கத்திற்குள்ளாக்கப்பட வேண்டமு். பரப்புரை இரண்டு வகையானதாக இருக்கலாம். ஒருவகைப் பரப்புரை கெரில்லாப் பிரதேசத்திற்கு வெளியே மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது தேசிய மட்டத்திலாகும். முற்றையது விடுவிக்கப்பட்ட பிரதேசத்திலாகும்.

பரப்புரையைத் துல்லியமாகவும் ஒழுங்கமைப்பாகவும் மேற்கொள்வதற்காகத் தனியான நோக்கத்தைக் கொண்ட அமைப்பும் அவசியமாகும். விடுவிக்கப்பட்டபிரதேசத்திற்குவெளி-யேதேசியமட்டத்திலானபரப்புரையை பத்திரிகை துண்டுப்பிரசுரங்கள், அரசியல் பரப்புரைப் பதிப்புகள் போன்றவற்றின் உதவியுடன் உள்ளூர் நிர்வாகங்கள் மேற்கொள்கின்றன.

**தொடர்வான்...**

**நெற்றிப்பொறியன்**

# நவம்பர் 27 மாவீரர் தினம் தேசியத்தலைவர் பிரபாகரனின் -மாவீரர் தின உரை 2008-

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே! இன்று மாவீரர் நாள். தமிழீழத் தாய்நாட்டின் விடிவிற்காகத் தமது இன்னுயிரை ஈகம் செய்து, எமது இதயமெல்லாம் நிறைந்து நிற்கும் எம்முயிர் வீரர்களை நாம் நினைவு கூர்ந்து கௌரவிக்கும் புனித நாள்.

ஆண்டாண்டு காலமாக அந்நிய ஆதிக்கப் பிடிக்குள் அடங்கிக்கிடந்த எமது தேசத்தை, ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடிபணியாத அடங்கா மண்ணாக மாற்றிவிட்ட எமது வீரமறவர்களைப் பூசித்து வணங்கும் திருநாள்.

எமது தேசம் விடுதலை பெற்று, எமது மக்கள் சுதந்திரமாக, தன்மானத்துடன் வாழவேண்டும் என்ற சத்திய இலட்சியத்திற்காக மடிந்த எமது மான வீரர்களை எமது நெஞ்சப் பசுமையில் நிறுத்திக்கொள்ளும் தேசிய நாள். எமது மாவீரர்கள் இந்த மண்ணை ஆழமாக நேசித்தார்கள். தாயக விடுதலைக்காகத் தமது கண்களைத் திறந்த கணம் முதல் நிரந்தரமாக மூடிய கணம் வரை அவர்கள் புரிந்த தியாகங்கள் உலக வரலாற்றில் ஒப்பற்றவை. எந்த ஒரு தேசத்திலும் எந்த ஒரு காலத்திலும் நிகழாத அற்புதமான அர்ப்பணிப்புக்களை எமது மண்ணிலே எமது மண்ணுக்காக எமது மாவீரர்கள் புரிந்திருக்கிறார்கள்.

இந்த மண்ணிலே தான் எமது மாவீரர்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தார்கள். இந்த மண்ணிலே தான் அவர்களது பாதச்சுவடுகள் பதிந்திருக்கின்றன. அவர்களது மூச்சுக்காற்றும் கலந்திருக்கிறது. இந்த மண்ணிலே தான் எமது இனம் காலாதிகாலமாக,கொப்பாட்டன், பாட்டன் என தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகிறது. **எமது இனச் சரித்திரம் நிலைபெற்ற இந்த மண்ணை ஆழமாகக் காதலித்து, இந்த மண்ணிற்காகவே மடிந்து, இந்த மண்ணின் மடியிலேயே எமது மாவீரர்கள் படுத்துறங்குகிறார்கள். அவர்கள் பள்ளி கொள்ளும் இந்த மண் எமக்கேயுரித்தான மண். எமக்கே சொந்தமான மண்.** இந்த வரலாற்று மண்ணை ஆக்கிரமித்து, அடக்கியாள சிங்களம் திமிர்கொண்டு நிற்கிறது தீராத ஆசை கொண்டு நிற்கிறது. மனித துயரங்களெல்லாம் அடங்காத, அருவருப்பான ஆசைகளிலிருந்தே பிறப்பெடுக்கின்றன. ஆசைகள் எல்லாம் அறியாமையிலிருந்தே தோற்றம் கொள்கின்றன. ஆசையின் பிடியிலிருந்து மீட்சி பெறாதவரை சோகத்தின் சுமையிலிருந்தும் விடுபட முடியாது. மண் ஆசை பிடித்து, சிங்களம் அழிவு நோக்கிய இராணுவப் பாதையிலே இறங்கியிருக்கிறது. உலகத்தையே திரட்டி வந்து எம்மோடு மோதுகிறது. இராணுவ வெற்றி பற்றிய கனவுலகில் வாழ்கிறது. சிங்களத்தின் இந்தக் கனவுகள் நிச்சயம் கலையும். எமது மாவீரர் கண்ட கனவு ஒருநாள் நனவாகும். இது திண்ணம்.

எனது அன்பான மக்களே! என்றுமில்லாதவாறு இன்று தமிழீழத் தேசம் ஒரு பெரும் போரை எதிர்கொண்டு நிற்கிறது. இப்போர் வன்னி மாநிலமெங்கும் முனைப்புப்பெற்று உக்கிரமடைந்து வருகிறது. சிங்கள அரசு இராணுவத்தீர்வில் நம்பிக்கை கொண்டு நிற்பதால், இங்கு இப்போர் நாளுக்குநாள் தீவிரமடைந்து விரிவாக்கம் கண்டு வருகிறது. தமிழரின் தேசிய வாழ்வையும் வளத்தையும் அழித்து,தமிழர்தேசத்தையேசிங்கள இராணுவ இறையாட்சியின் கீழ் அடிமைப்படுத்துவதுதான் சிங்கள அரசின் அடிப்படையான நோக்கம். இந்த நோக்கத்தைச் செயற்படுத்தி விடும் எண்ணத்தில், தனது போர்த்திட்டத்தை முழுமுனைப்போடு முன்னெடுத்து வருகிறது. தனது முழுப் படை பலத்தையும் ஆயுத பலத்தையும் ஒன்றுதிரட்டி, தனது முழுத் தேசிய வளத்தையும் ஒன்றுகுவித்து, சிங்கள தேசம் எமது மண் மீது ஒரு பாரிய படையெடுப்பை நிகழ்த்தி வருகிறது. சிங்கள இனவாத அரசு ஏவிவிட்டிருக்கும் இந்த ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து, எமது விடுதலை வீரர்கள் வீராவேசத்தோடு போராடி வருகின்றனர். உலகின் பல்வேறு நாடுகளும் தமிழ் இன அழிப்புப் போருக்கு முண்டுகொடுத்து நிற்க, நாம் தனித்து நின்று, எமது மக்களின் தார்மீகப் பலத்தில் நின்று, எமது மக்களின் விடிவிற்காகப் போராடி வருகிறோம். இன்று எமது விடுதலை இயக்கம் மிகவும் கடினமான, நெருக்கடிகள் நிறைந்த ஒரு வரலாற்றுப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. உலகின் எந்தவொரு விடுதலை இயக்கமுமே சந்தித்திராதபலசரிவுகளை,பலதிருப்பங்களை, பல நெருக்கடிகளை நாம் இந்த வரலாற்று ஓட்டத்திலே எதிர்கொண்டிருக்கிறோம். எமது பலத்திற்குமிஞ்சியபாரியசக்திகளையெல்லாம் நாம் எதிர்கொண்டிருக்கிறோம். **வல்லமைக்கு மிஞ்சிய வல்லாதிக்க சக்திகளோடு நேரடியாக மோதியிருக்கிறோம். அலையலையாக எழுந்த எதிரியின் ஆக்கிரமிப்புக்களை எல்லாம் நேருக்கு நேர் நின்று சந்தித்திருக்கிறோம்.** பெருத்த நம்பிக்கைத் துரோகங்கள், பெரும் நாசச் செயல்கள் என எமக்கு எதிராகப் பின்னப்பட்ட எண்ணற்ற சதிவலைப் பின்னல்களை எல்லாம் தனித்து நின்று தகர்த்திருக்கிறோம். புயலாக எழுந்த இத்தனை பேராபத்துக்களையும் மலையாக நின்று எதிர்கொண்டோம். இவற்றோடு ஒப்புநோக்குகையில், இன்றைய சவால்கள் எவையும் எமக்குப் புதியவையும் அல்ல, பெரியவையும் அல்ல. இந்தச் சவால்களை நாம் எமது மக்களின் ஒன்றுதிரண்ட பலத்துடன் எதிர்கொண்டு வெல்வோம்.

**சிங்கள தேசம் ஆக்கிரமித்து அடிமை கொள்ளத் துடிக்கும் இந்த மண் அதற்கு என்றுமே சொந்தமானதன்று.** இந்த மண் எமக்குச் சொந்தமான மண் பழந்தமிழர் நாகரீகம் நீடித்து நிலைபெற்ற மண் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே எமது மூதாதையர் வாழ்ந்து வளர்ந்த மண். இந்த மண்ணிலேதான் எமது ஆதிமன்னர்கள் இராச்சியங்களும் இராசதானிகளும் அமைத்து அரசாண்டார்கள். எமது இன வேர் ஆழவேரோடியுள்ள இந்த மண்ணிலே, நாம் நிம்மதியாக, கௌரவமாக, அந்நியரின் அதிகார ஆதிக்கமோ தலையீடுகளோ இன்றி, எமது வாழ்வை நாமே அமைத்து வாழ விரும்புகிறோம். ஆங்கிலேய காலனியாதிக்கம் அகன்று, சிங்கள ஆதிக்கம் எம்மண் மீது கவிந்த நாள் முதல், நாம் எமது நீதியான உரிமைகளுக்காக அகிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் போராடி வருகிறோம்.

சுயநிர்ணய உரிமைக்கான எமது இந்த அரசியல் போராட்டம் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துச்செல்கிறது. இந்த நீண்ட படிநிலை வரலாற்றில், வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு வடிவங்களாக எமது போராட்டம் வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டு வந்திருக்கிறது. ஆரம்பத்தில் அமைதியாக, மென்முறை வடிவில், ஜனநாயக வழியில் அமைதி வழிப்போராட்டங்கள் வாயிலாக எமது மக்கள் நீதிகேட்டுப் போராடினார்கள். அரசியல் உரிமைகோரி,தமிழ்மக்கள்தொடுத்தசாத்வீகப் போராட்டங்களைச் சிங்கள இனவாத அரசு ஆயுத வன்முறை வாயிலாக மிருகத்தனமாக ஒடுக்க முனைந்தது. அரச ஒடுக்குமுறை கட்டுக்கடங்காமல் உக்கிரம் அடைந்து, அதன் தாங்க முடியாத கொடுமைகளை எமது மக்கள் சந்தித்தபோதுதான், வரலாற்றின் தன்னியல்பான விதியாக எமது விடுதலை இயக்கம் பிறப்பெடுத்தது. சிங்கள இனவாத அரசின் ஆயுதப் பயங்கரவாதத்திலிருந்து எமது மக்களைப் பாதுகாக்கவே நாம் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம். **ஆயுத வன்முறை வழியை நாம் விரும்பித் தேர்வு செய்யவில்லை. வரலாறுதான் எம்மிடம் கட்டாயமாகக் கையளித்தது.**

தவிர்க்கமுடியாத தேவையின் நிர்ப்பந்தமாக ஆயுதப் போராட்டத்தை வரித்துக்கொண்ட போதும், நாம் எமது மக்களின் தேசியப் பிரச்சினைக்குப் போரை நிறுத்தி, அமைதி வழியில் தீர்வுகானவே விரும்புகிறோம். இதற்கு எமது விடுதலை இயக்கம் என்றுமே தயாராக இருக்கிறது. நாம் சமாதான வழிமுறைகளுக்கு என்றுமே எதிரானவர்கள் அல்லர். அதேநேரம், நாம் சமாதானப் பேச்சுக்களிற் பங்குபற்றத் தயங்கியதும் இல்லை. சமாதான வழிமுறை தழுவி,எமதுமக்களின் அரசியல்உரிமைகளை வென்றெடுக்க, திம்புவில் தொடங்கி, ஜெனீவா வரை பல்வேறு வரலாற்றுச் சூழல்களில்




பேச்சுக்களில் பங்குபற்றி வந்திருக்கிறோம். எமது மக்களின் தேசியப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வுகாண நாம் முழு மனதுடனும் நேர்மையுடனும் செயற்பட்ட போதும் பேச்சுக்கள் எல்லாம் தோல்வியிலேயே முடிந்தன. சிங்கள அரசுகளின் விட்டுக்கொடாத கடும்போக்கும், நாணயமற்ற அரசியல் அணுகுமுறைகளும் இராணுவ வழித் தீர்விலான நம்பிக்கைகளுமே இந்தத் தோல்விகளுக்குக் காரணம்.

பிரமிப்பூட்டும் போரியற் சாதனைகளைப் படைத்து, சிங்கள ஆயுதப் படைகளின் முதுகெலும்பை முறித்து, படைவலுச் சம நிலையை எமக்குச் சாதகமாகத் திருப்பியபோதும், நாம் நோர்வேயின் அனுசரணையிலான அமைதிப் பேச்சுக்களிற் கலந்துகொண்டோம். போருக்கு முடிவுகட்டி, ஆறு ஆண்டுகளாகத் தொடர்ந்த அமைதிப் பேச்சுக்களில் நேர்மையுடனும் பற்றுறுதியுடனும் பங்குகொண்டோம். ஆயுதப் படைகளின் அத்துமீறிய செயல்களையும் ஆத்திரமூட்டும் சம்பவங்களையும் பொறுத்துக்கொண்டு, அமைதி பேணினோம். இத்தனையையும் நாம் செய்தது, சிங்கள இனவாத அரசு எமது மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று நீதி செய்யும் என்ற நம்பிக்கையினால் அன்று. சிங்கள அரசின் சமாதான முகமூடியைத் தோலுரித்துக்காட்டி, சமாதானத்தில் எமக்குள்ள பற்றுறுதியை உலகத்திற்கு வெளிப்படுத்தவே நாம் பேச்சுக்களில் கலந்துகொண்டோம்.

உலக அரங்கில் பல்வேறு நாடுகளின் தலைநகரங்களில் அரங்கேற்றப்பட்ட இந்த அமைதிப் பேச்சுக்கள், தமிழ் மக்களின் அன்றாட அவசர வாழ்க்கைப் பிரச்சினைகளையோ இனப்பிரச்சினையின் மூலாதாரப் பிரச்சினைகளையோ தீர்ப்பவையாக அமையவில்லை. புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, தமிழர் தேசத்தையும் அனைத்துலக சமூகத்தையும் ஏமாற்றுவதற்கே சிறிலங்கா அரசு இப்பேச்சுவார்த்தைகளைப் பயன்படுத்தியது. பேச்சு என்ற போர்வையில், சிங்கள அரசு தமிழர் தேசம் மீது ஒரு பெரும் படையெடுப்பிற்கான ஆயத்தங்களைச் செய்தது. போர் ஓய்வையும் சமாதானச் சூழலையும் பயன்படுத்தி, தனது நலிந்து போன பொருளாதாரத்தை மீளக்கட்டி, தனது சிதைந்துபோன இராணுவப் பூதத்தை மீளவும் தட்டியெழுப்பியது. பெருந்தொகையில் ஆட்சேர்ப்பு நிகழ்த்தி, ஆயுதங்களைத் தருவித்து, படையணிகளைப் பலப்படுத்தி, போர் ஒத்திகைகளைச் செய்தது. தமிழர் தேசம் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்க, சிங்கள தேசம் போர்த் தயாரிப்பு வேலைகளிலேயே தன்னை முழுமையாக அர்ப்பணித்தது.

இதேநேரம், சமாதான முயற்சிகளின் காவலர்கள் எனத் தம்மை அடையாளப்படுத்திய உலக நாடுகளில் ஒரு பகுதியினர் அவசரப்பட்டு அதிரடி நடவடிக்கையில் இறங்கியமை, சமாதான முயற்சிகளுக்கே ஊறுவிளைவிப்பதாக அமைந்தது. எமது சுதந்திர இயக்கத்தை இந்நாடுகள் ஒரு பயங்கரவாதக் குழுவாகச் சிறுமைப்படுத்திச் சித்திரித்து, தடை செய்யப்பட்ட இயக்கங்களின் வரிசையில் பட்டியலிட்டு, எம்மை வேண்டத்தகாதோராக, தீண்டத்தகாதோராக ஒதுக்கி ஓரங்கட்டி, புலம்பெயர்ந்து வாழும் எம்மக்கள் மீது வரம்பு மீறிய வரையறைகளை விதித்து, கட்டுப்பாடுகளைப் போட்டு, எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக அவர்கள் முன்னெடுத்த அரசியற் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டைகள் போட்டன. தாம் வாழும் நாடுகளின் அரசியல் சட்டவிதிகளுக்கு அமைவாக, நீதிநெறி வழுவாது எம்மக்கள் மேற்கொண்ட மனிதாபிமானப் பணிகளைக் கொச்சைப்படுத்தி சிங்கள அரசின் இன அழிப்புக்கு ஆளாகி, மனிதப் பேரவலத்திற்கு முகம் கொடுத்து நின்ற தமது தாயக உறவுகளைக் காக்க எமது மக்கள் முன்னெடுத்த மனிதநேய உதவிப் பணிகளைப் பெரும் குற்றவியற் செயல்களாக அடையாளப்படுத்தி, தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும் தமிழின உணர்வாளர்களையும் கைது செய்து, சிறைகளிலே அடைத்து, அவமதித்தன. இந்நாடுகளின் ஒரு பக்கச்சார்பான இந்த நடவடிக்கைகள் பேச்சுக்களில் நாம் வகித்த சமநிலை உறவையும் சமபங்காளி என்ற தகைமையையும் வெகுவாகப் பாதித்தன. இது சிங்கள தேசத்தின் இனவாதப்போக்கை மேலும் தூண்டிவிட்டது. சிங்கள இனவாத சக்திகள் உசாரடைந்து, எமக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தின. இது சிங்கள தேசத்தை மேலும் இராணுவப் பாதையிலே தள்ளிவிட்டது.

சிங்கள தேசம் சமாதானக் கதவுகளை இறுகச் சாத்திவிட்டுத் தமிழர் தேசத்தின் மீது போர் தொடுத்தது. அனைத்துலகத்தின் அனுசரணையோடு கைச்சாத்தான போர் நிறுத்த ஒப்பந்தத்தையும் ஒருதலைப்பட்சமாகக் கிழித்தெறிந்தது. அப்போது சமாதானம் பேசிய உலக நாடுகள் ஒப்புக்குத்தானும் இதனைக் கண்டிக்கவில்லை கவலை கூடத் தெரிவிக்கவில்லை. மாறாக, சில உலக நாடுகள் சிங்கள தேசத்திற்கு அழிவாயுதங்களை அள்ளிக்கொடுத்து, இராணுவப் பயிற்சிகளையும் இராணுவ ஆலோசனைகளையும் இலவசமாக வழங்கி வருகின்றன. இதனால்தான் சிங்கள அரசு தமிழருக்கு எதிரான இன அழிப்புப் போரைத் துணிவுடனும் திமிருடனும் ஈவிரக்கமின்றியும் தொடர்ந்து வருகிறது.

இன்று சிங்கள தேசம் என்றுமில்லாதவாறு இராணுவ பலத்திலும் இராணுவ அணுகு முறையிலும் இராணுவ வழித் தீர்விலும் நம்பிக்கைகொண்டு செயற்படுகிறது.

5 ஆம் பக்கம் பார்க்க...

4அம் பக் தொடர்ச்சி...

தமிழர் தாயகத்தில் இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்டி, ஆயுத அடக்குமுறையின் கீழ் தமிழர்களை ஆட்சிபுரிய வேண்டும் என்ற அதன் ஆசை அதிகரித்திருக்கிறது. இதனால் போர் தீவிரம் பெற்று, விரிவுபெற்று நிற்கிறது. **இந்தப் போர் உண்மையில் சிங்கள அரசு கூறுவது போல, புலிகளுக்கு எதிரான போர் அன்று. இது தமிழருக்கு எதிரான போர் தமிழ் இனத்திற்கு எதிரான போர் தமிழின அழிப்பை இலக்காகக் கொண்ட போர் மொத்தத்தில் இது ஓர் இன அழிப்புப் போர்.** இந்தப் போர் எமது மக்களைத்தான் பெரிதும் பாதித்திருக்கிறது. போரின் கொடூரத்தை மக்களுக்கு எதிராகத் திருப்பிவிட்டு, மக்கள் மீது தாங்கொணாத் துன்பப்பளுவைச் சுமத்தி, மக்களைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராகத் திருப்பிவிடலாம் என்ற நப்பாசையிற் சிங்கள அரசு செயற்பட்டு வருகிறது. பாதைகளை மூடி, உணவையும் மருந்தையும் தடுத்து, எமது மக்களை இறுக்கமான இராணுவ முற்றுகைக்குள் வைத்துக்கொண்டு, கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களையும் எறிகணை வீச்சுக்களையும் நடாத்தி வருகிறது. சொந்த நிலத்தை இழந்து, அந்த நிலத்தில் அமைந்த வாழ்வை இழந்து, அகதிகளாக அலையும் அவலம் எம்மக்களுக்குச் சம்பவித்திருக்கிறது. பிறப்பிலிருந்து இறப்பு வரை சதா துன்பச்சிலுவையைச் சுமக்கின்ற மக்களாகஎம்மக்கள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். நோயும் பிணியும் உடல்நலிந்த முதுமையும் சாவுமாக எம்மக்களது வாழ்வு சோகத்தில் தோய்ந்து கிடக்கிறது. எமது மக்களின் உறுதிப்பாட்டை உடைத்து விடவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு எமது எதிரியான சிங்கள அரசு இன்று எம்மக்கள் மீது எண்ணற்ற கொடுமைகளைப் புரிந்து வருகிறது. பெரும் அநீதிகளை இழைத்து வருகிறது. உலகில் எங்குமே நிகழாத கொடூரமான அடக்குமுறைகளைப் பிரயோகிக்கிறது. எமது தேசத்தின் மீது ஒரு பெரும் பொருண்மியப்போரை தொடுத்து, எம்மக்களின் பொருளாதார வாழ்வைச் சிதைத்து அவர்களது நாளாந்த சீவியத்தைச் சீர்குலைக்கின்ற செயலிலே இறங்கியிருக்கிறது. சிறிலங்கா படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழீழ நிலப்பரப்பில் மாதந்தோறும் நூற்றுக்கணக்கானோர் காணாமல் போகின்றனர் கொல்லப்படுகின்றனர். சிங்களப் பகுதிகளில் தமிழர் காணாமல் போவதும் கொல்லப்படுவதும் வழமையான நிகழ்ச்சியாகி விட்டது.

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள தமிழர் பகுதிகளிலே ஒரு மறைமுகமான இன அழிப்புக் கொள்கை இன்று வேகமாகச் செயற்படுத்தப்படுகிறது. சாவும் அழிவும் இராணுவ அட்டூழியங்களும் சொந்த மண்ணிலேயே சிறைப்பட்ட வாழ்வுமாக எம்மக்கள் நாளாந்தம் அனுபவிக்கும் துயரம் மிகக்கொடியது. கைதுகளும் சிறை வைப்புக்களும் சித்திரவதைகளும் பாலியல் வல்லுறவுகளும் கொலைகளும் காணாமல் போதல்களும் புதைகுழிகளுக்குள் புதைக்கப்படுவதுமாக ஒரு நச்சு வட்டத்திற்குள் எமது மக்களது வாழ்வு சுழல்கிறது. இருந்த போதும், எமது மக்கள் நம்பிக்கை இழக்கவில்லை. சுதந்திர தாகம் கொண்டு, எழுச்சி கொண்ட எம்மக்களை எந்தத் தடைகளாலும் எதுவும் செய்துவிடமுடியாது. ஆகாயத்திலிருந்து வீழும் குண்டுகளாலும் அவர்களது விடுதலை வேட்கையை அழித்துவிட முடியாது. எம்மக்கள் துன்பச்சிலுவையைச் சதா சுமந்து பழகியவர்கள். அழிவுகளையும் இழப்புக்களையும் நித்தம் சந்தித்து வாழ்பவர்கள். இதனால் அவர்களது இலட்சிய உறுதி மேலும் உரமாகியிருக்கிறது. விடுதலைக்கான வேகம் மேலும் வீச்சாகியிருக்கிறது.


பெரும் போருக்கு முகம் கொடுத்தவாறு, நாம் இத்தனை காலமாக இத்தனை தியாகங்களைப் புரிந்து போராடி வருவது எமது மக்களின் சுதந்திரமான, கௌரவமான, நிம்மதியான வாழ்விற்கே அன்றி வேறெதற்காகவும் அன்று. உலகத் தமிழினத்தின் ஒட்டுமொத்தப் பேராதரவோடு நாம் இந்தப் போராட்டத்தை நடாத்தி வருகிறோம். அதுமட்டுமன்று, எமது போராட்டம் எந்தவொரு நாட்டினதும் தேசிய நலன்களுக்கோ அவற்றின் புவிசார் நலன்களுக்கோ பொருளாதார நலன்களுக்கோ குறுக்காக நிற்கவில்லை. எமது மக்களது ஆழமான அபிலாசைகளும் எந்தவொரு தேசத்தினதும் எந்த மக்களினதும் தேசிய நலன்களுக்குப் பங்கமாக அமையவில்லை. அத்தோடு இந்த நீண்ட போராட்ட வரலாற்றில், நாம் திட்டமிட்டு எந்தவொரு தேசத்திற்கு எதிராகவும் நடந்துகொண்டதுமில்லை.

எமது விடுதலை இயக்கமும் சரி எமது மக்களும் சரி என்றுமே உலக நாடுகளுடனும் எமது அண்டை நாடான இந்தியாவுடனும் நட்புறவை வளர்த்துச் செயற்படவே விரும்புகிறோம். இதற்கான புறநிலைகளை உருவாக்கி, நட்புறவுப்பாலத்தைவளர்த்துவிடவேசித்தமாக இருக்கிறோம். எமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி, காத்திரமான உறவுகளைக் கட்டியெழுப்புவதற்குக் காத்து நிற்கிறோம். எம்மை தடைசெய்துள்ள நாடுகள், எமது மக்களது அபிலாசைகளையும் ஆழமான விருப்பங்களையும் புரிந்து கொண்டு, எம்மீதான தடையை நீக்கி, எமது நீதியான போராட்டத்தை அங்கீகரிக்கவேண்டுமென அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

இன்று இந்திய தேசத்திலே பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அங்கு அடங்கிக்கிடந்த எமது போராட்ட ஆதரவுக்குரல்கள் இன்று மீளவும் ஓங்கி ஒலிக்கின்றன. எமது போராட்டத்தை ஏற்றுக்கொள்கின்ற ஏது நிலைகள் வெளிப்படுகின்றன. கனிந்து வருகின்ற இந்தக் கால மாற்றத்திகேற்ப, இந்தியப் பேரரசுடனான அறுந்துபோன எமது உறவுகளை நாம் மீளவும் புதுப்பித்துக்கொள்ள விரும்புகிறோம். அன்று, இந்தியா கைக்கொண்ட நிலைப்பாடுகளும் அணுகுமுறைகளும் தலையீடுகளும் ஈழத்தமிழருக்கும் அவர்களது போராட்டத்திற்கும் பாதகமாக அமைந்தன. இனவாத சிங்கள அரசு தனது கபட நாடகங்களால்எமதுவிடுதலைஇயக்கத்திற்கும் முன்னைய இந்திய ஆட்சிப்பீடத்திற்கும் இடையே பகைமையை வளர்த்து விட்டது. இந்தப் பகைப்புலத்தில் எழுந்த முரண்பாடுகள் மேலும் முற்றிப் பெரும் போராக வெடித்தது. இதன் ஒட்டுமொத்த விளைவாக எமது மக்கள் பெரும் அழிவுகளைச் சந்திக்க நேர்ந்தது.

நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக நின்ற காரணத்தினால்தான் எமது இயக்கத்திற்கும் இந்திய அரசிற்கும் பிணக்கு ஏற்பட்டது. எனினும், இந்தியாவை நாம் ஒருபோதும் பகை சக்தியாகக் கருதியதில்லை. இந்தியாவை எமது நட்புச் சக்தியாகவே எமது மக்கள் என்றும் கருதுகிறார்கள். எமது தேசியப் பிரச்சினை விடயத்தில் இந்தியப் பேரரசு ஒரு சாதகமான நிலைப்பாட்டை எடுக்கும் எனப் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள். காலமும் கடல் கடந்த தூரமும் எம்மைப் பிரிந்து நிற்கின்ற போதும், எமது மக்களின் இதயத்துடிப்பைநன்கறிந்து, தமிழகம் இந்தவேளையிலே எமக்காக எழுச்சிகொண்டு நிற்பது தமிழீழ மக்கள் அனைவருக்கும் எமது விடுதலை இயக்கத்திற்கும் பெருத்த ஆறுதலையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறது. எம்மக்களுக்காக ஆதரவுக் குரல் எழுப்பி, அன்புக்கரம் நீட்டும் தமிழக மக்களுக்கும் தமிழகத் தலைவர்களுக்கும் இந்தியக் தலைவர்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே எமது அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.





இதேநேரம், எமது தமிழீழத் தனியரசுப் போராட்டத்திற்கு ஆதரவாக வலுவாகக் குரலெழுப்புவதோடு, இந்தியாவிற்கும் எமது இயக்கத்திற்கும் இடையிலான நல்லுறவிற்குப் பெரும்இடைஞ்சலாகஎழுந்துநிற்கும்எம்மீதான தடையை நீக்குவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

எனது அன்பான மக்களே! சிங்கள அரசியல் உலகத்தில் பெரும் மாற்றங்களோ திருப்பங்களோ நிகழ்ந்து விடவில்லை. அங்கு அரசியல், போராகப் பேய் வடிவம் எடுத்து நிற்கிறது. அன்பையும் அறத்தையும் போதித்த புத்த பகவானைப் போற்றி வழிபடும் அந்தத் தேசத்திலே இனக்குரோதமும் போர் வெறியும் தலைவிரித்தாடுகின்றன. அங்கு போர்ப் பேரிகைகளைத்தான் எம்மால் கேட்க முடிகிறது. போரை கைவிட்டு, அமைதி வழியில் பிரச்சினையைத் தீர்க்குமாறு அங்கு எவரும் குரல் கொடுக்கவில்லை. சிங்களத்தின் அரசியல்வாதிகளிலிருந்து ஆன்மீகவாதிகள் வரை, பத்திரிகையாளர்களிருந்து பாமர மக்கள் வரை போருக்கே குரல் கொடுக்கிறார்கள்.

தமிழர் தேசம் போரை விரும்பவில்லை. வன்முறையை விரும்பவில்லை. அகிம்சை வழியில் அமைதி வழியில் நீதி வேண்டி நின்ற எம் மக்களிடம் சிங்கள தேசம் தான் போரைத் திணித்திருக்கிறது. எமது பிராந்தியத்தைச் சேர்ந்த சார்க் நாட்டுத் தலைவர்கள் கொழும்பிலே கூடிய போது, எமது தேசத்தின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி நாம் அறிவித்த பகைமைத் தவிர்ப்பையும் ஏற்க மறுத்து, அதனை ஏளனம் செய்து போரைத் தொடர்ந்து நிற்பதும் சிங்கள தேசம் தான். ஏற்றுக்கொள்ளவே முடியாத அவமதிப்பூட்டும் நிபந்தனைகளை விதித்துப் போரைத் தொடர்வதும் சிங்கள தேசம் தான்.

சிங்கள தேசம் ஒரு பெரும் இன அழிப்புப் போரை எமது மண்ணிலே நிகழ்த்தி வருகிறது. இந்த உண்மையை மூடிமறைத்து, உலகத்தைக் கண்கட்டி ஏமாற்ற சிங்கள அரசுகள் காலங்காலமாகப் பல்வேறு அரசியல் நாடகங்களை அரங்கேற்றி வருகின்றன. வட்டமேசை மாநாட்டில் தொடங்கி, இன்று அனைத்து கட்சிக் கூட்டம் என இந்த ஏமாற்று நாடகத்தின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. கடந்து சென்ற இந்த நீண்ட கால ஓட்டத்தில், சிங்கள அரசுகள் உலகத்தை ஏமாற்றியதைத் தவிர, தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு உருப்படியான எந்தவொரு தீர்வினையும் முன்வைக்கவில்லை. மாறாக, சிங்கள தேசம் தனது படைக்கல சக்தியால் தமிழர் நிலங்களைப் பற்றியெரிய வைத்திருக்கிறது. தமிழரது அமைதியைக் கெடுத்து, அவர்களது நிலத்தில் அமைந்த வாழ்வை அழித்து, அவர்களை அகதிகளாக அலைய வைத்திருக்கிறது. தமிழரின் மூலாதாரக் கோரிக்கைகளை ஏற்க மறுத்து, தமிழர் தேசத்தை இரண்டாகப் பிளந்து, அங்கு தமிழர் விரோத ஆயுதக்குழுக்களை ஆட்சியில் அமர்த்தி, இராணுவப் பேயாட்சி நடாத்துகிறது. புலிகளைத் தோற்கடித்த பின்னர்தான் தமது தீர்வுத்திட்டத்தை அறிவிப்போம் எனக்கூறிக்கொண்டு, போரை நடாத்துகிறது. தமிழர்களைக் கொடுமைப்படுத்திக் கொன்றொழித்த பின்னர், சிங்களம் யாருக்கு தீர்வை முன்வைக்கப்போகிறது? தமிழரின் உண்மையான பிரதிநிதிகளை, அவர்களது பேரம் பேசும் சக்தியை அழித்துவிட்டு, எப்படிச் சிங்களம் தீர்வை முன்வைக்கப்போகிறது? தமிழரின் வரலாற்றுச் சொத்தான தாயக நிலத்தையே ஏற்க மறுக்கும் சிங்களம், எப்படி எமது மக்களுக்கு ஒரு நீதியான தீர்வை முன்வைக்கப்போகிறது? தமிழரின் தேசியப் பிரச்சினை விடயத்தில், சிங்களம் அடக்குமுறை என்ற ஒரே பாதையில் தான் சென்று கொண்டிருக்கிறது. இராணுவ வன்முறைப் பாதையைக் கைவிட்டு, சிங்களம் நீதி வழங்கும் என எமது மக்கள் வைத்திருந்த சிறிய நம்பிக்கையும் இன்று அடியோடு அழிந்துவிட்டது. சிங்கள தேசத்திலே கடந்த அறுபது ஆண்டுகளாக நிகழாத அரசியல் மாற்றம் இனிவரும் காலங்களில் நிகழ்ந்துவிடப் போவதுமில்லை, அப்படி நம்பி ஏமாறுவதற்கு எமது மக்களும் தயாராக இல்லை.

**பூமிப்பந்திலே ஈழத்தமிழினம் ஒரு சிறிய தேசமாக இருக்கின்ற போதும் நாம் பெரும் வலிமை வாய்ந்த ஒரு சக்திமிக்க இனம். கன்னிகரற்ற ஒரு தனித்துவமான இனம். தனித்துவமான மொழியையும் பண்பாட்டு வாழ்வையும் வரலாற்றையும் கொண்ட ஒரு பெருமைமிக்க இனம்.** இப்படியான எமது அருமை பெருமைகளையெல்லாம் அழித்து, தமிழீழ தேசத்திலே தமிழரின் இறையாண்மையைத் தகர்த்துவிட்டு, இராணுவப் பலத்தால் சிங்களம் தனது இறையாண்மையை திணித்துவிடத் துடிக்கிறது. தமிழரின் சுதந்திர இயக்கம் என்ற வகையில், நாம் எமது மண்ணில் சிங்கள ஆக்கிரமிப்பிற்கோ சிங்கள ஆதிக்கத்திற்கோ என்றுமே இடமளிக்கப்போவதில்லை. எத்தனை சவால்களுக்கு முகம்கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும் எத்தனை சக்திகள் எதிர்த்து நின்றாலும் நாம் தமிழரின் சுதந்திர விடிவிற்காகத் தொடர்ந்து போராடுவோம். **வரலாறு விட்ட வழியில், காலம் இட்ட கட்டளைப்படி சிங்கள அந்நிய ஆக்கிரமிப்பு அகலும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்.**

இந்த வரலாற்றுச் சூழமைவில், தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில் வளர்ந்தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதியாகக் குரலெழுப்பி, எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களைப் பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன். அத்துடன், தங்களது தாராள உதவிகளை வழங்கித் தொடர்ந்தும் பங்களிக்குமாறும் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். இந்த சந்தர்ப்பத்திலே தேச விடுதலைப் பணியைத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் எனது அன்பையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். **சத்திய இலட்சியத் தீயில் தம்மையே அழித்துச் சரித்திரமாகிவிட்ட எமது மாவீரர்கள் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோமென உறுதியெடுத்துக்கொள்வோமாக.** இதுவே தலைவர் பிரபாகரனின் 2008ஆம் ஆண்டு கடைசி மாவீர தின உரை என்பது குறிப்பிடதக்கது

# கோட்டபாய அரசு தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுத் தருமா?



நாட்டில் யுத்தம் நிறைவடைந்து 11 வருடங்களைக் கடந்துள்ள நிலையில் தமிழ் மக்களுக்கான அரசியல் ரீதியான தீர்வு இதுவரையில் எட்டப்படவில்லை. அரசியல் ரீதியானத் தீர்வுகள் என எதுவும் 19வது சரத்திலோ 20வது சரத்திலோ சொல்லப்படவில்லை. தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டத்தையும் வழங்கும் நோக்கில் தற்போதைய அரசாங்கமும் இல்லை. இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ந்தும் விமர்சனங்களே எழுப்பப்பட்டு வருகிறது.

பிரதானமாக தமிழீழ விடுதலைப்புலிகள் மீது போடப்பட்டுள்ள பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படுமாக இருந்தாலே கூடுதல் பிரச்சினைகளுக்கானத் தீர்வுகள் தமிழ் மக்களுக்குச் சாதகமாக அமையப்பெறும். அதனை செய்து கொடுப்பதற்கு எந்த அரசாங்கமும் விரும்பவில்லை. அபிவிருத்தி என்ற போர்வையில் தமது அரசியலை ஸ்திரப்படுத்திக்கொள்ள இந்த அரசாங்கமும் முயற்சித்து வருகின்றது. அதற்காகவே தமிழ் அரசியல்வாதிகளை விலை கொடுத்து தமக்குள் உள்வாங்கிக் கொண்டு தமிழ் மக்கள் மத்தியில் பிரிவினைவாதத்தை உருவாக்கி அரசாங்கம் தனது வாக்குப்பலத்தினால் பெரும்பான்மையை தன்வசப்படுத்தி தொடர்ந்தும் தமிழினத்தை பாதாளம் நோக்கி இழுத்துச் செல்கின்ற ஒரு நடவடிக்கையாகவே இதனைக் காணமுடிகிறது. சிறிமாவோ தொடக்கம் கோட்டபாய ராஜபக்ச வரை தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்ட விடயத்தில் அக்கறை கொள்ளவில்லை என்பதையே இதுவரையும் ஆட்சியிலிருந்த அரசுகளின் செயற்பாடுகள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

தனிச் சிங்களம் மட்டுமே அரச கரும மொழியெனகொண்டுவந்தவர்கள்சிங்கள ஆட்சியாளர்கள். ஜே.ஆர்.ஜெயவர்தன அவர்கள் கடுமையான போக்கைக் கொண்டிருந்தவர். அவருடைய யாப்பு என்பது பௌத்தத்திற்கு முதலிடம் என்பதும் அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை என்பதும் தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டத்திற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருந்தது. ரணசிங்க பிரேமதாஸ தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நட்புறவை பேணிக்கொண்ட அதே நேரம் இந்திய இராணுவத்தை வைத்து விடுதலைப்புலிகளை தாக்கி அழிக்கின்ற உத்திகளைக் கையாண்டார். அதன் பின்னர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க சர்வாதிகாரம் கொண்ட ஒரு ஆட்சி முறையைக் கையாண்டார். சமாதானப் புறாவாக புறப்பட்ட அவர் தமிழீழ விடுதலைப்புலிகளை சர்வதேச ரீதியில் பயங்கரவாதிகள் என முத்திரை குத்துவதற்கு மறைந்த அன்றைய வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரைப் பயன்படுத்தி விடுதலைப் போராட்டத்திற்கு பெரும் முட்டுக்கட்டையை ஏற்படுத்தினார். பின்னர் விடுதலைப்புலிகளின் உக்கிர தாக்குதலினால் பின்னடைவை சந்தித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சிப்பொறுப்பை மகிந்த ராஜபக்சவிடம் கையளித்தார். மகிந்த ராஜபக்ச அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது சர்வதேச நாடுகளின் உதவியுடன் போரை கட்டவிழ்த்துவிட்டிருந்தார். இந்த போர் 2009 ஆம் ஆண்டு முடிவிற்கு கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர் தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம் சாத்தியப்படும், மகிந்த ராஜபக்சவினால் நிறைவேற்றப்படும் என்று இருந்த காலகட்டத்தில் நல்லாட்சி என்று கூறிக்கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஆட்சிபீடம் ஏறினார். அதன் பின்னர் நல்லாட்சியும் கவிழ்க்கப்பட்டு, நாட்டின் புதிய ஜனாதிபதியாக கோட்டபாய ராஜபக்ச அவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றார்.

இந்த நிலையில் சிங்கள கட்சிகளுக்குள் பல்வேறு முறுகல் நிலை ஏற்பட்டது. தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டத்தை வென்று கொடுக்க முடியாமல் போனது. மீண்டும் ஒரு சர்வாதிகார ஆட்சியாக ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் ஆட்சிபீடம் ஏறியிருக்கின்றார். இவர் தன்னுடைய பரம்பரை அரசியலை நிலைநிறுத்தும் செயற்பாடாகவே தன்னுடைய அரசியல் நகர்வுகளை நகர்த்திச் செல்கின்றார். ஜனாதிபதிகோட்டபாயராஜபக்சவினுடைய கடும் போக்கானது அரசியல் மட்டங்களில் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க அரசானது கோட்டபாய ராஜபக்ச அவர்களுக்கு பூரண ஆதரவை வழங்கியிருக்கின்றது. தமிழீழ விடுதலைப்புலிகள் தீவிரவாதிகள் என்ற பிரம்மையில் இருந்து அரசாங்கம் இன்னமும் விடுபடவில்லை. தமிழ் மக்களுக்குஒருதீர்வைப்பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதிலும் அவர்களுக்கு விருப்பமில்லை. பிரச்சினைகள் இருந்தால் மட்டுமே தமது அரசியல் நடவடிக்கைகளை முன்கொண்டு செல்லலாம் என்று தற்போதைய அரசும் நினைக்கின்றது. அவ்வாறே கடந்த கால அரசாங்கங்களும் செயற்பட்டன.

1983 - 1990 வரையில் தமிழின படுகொலைகள் பெருவாரியாக இடம்பெற்றது. பின்னர் அரச வன்முறைகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராடிய தமிழீழ விடுதலைப்புலிகள் 1990 - 2000 வரை படிப்படியாக வடகிழக்கை தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். அக்காலகட்டத்தில் முப்படைகளையும் கொண்ட ஒரு இயக்கமாகவும் நீதி, நிர்வாகம் உட்பட 52 கட்டமைப்புக்களை தமிழீழ விடுதலைப்புலிகள் கொண்டிருந்தனர்.

வெளிநாடுகளில் இருந்து நாணய பரிமாற்றம் இலகுவில் செய்து கொள்ள தமிழீழ வைப்பகம் திறந்து வைக்கப்பட்டது. எந்தவொரு பயங்கரவாத நாட்டிலும் இல்லாதளவிற்கு தமிழீழ விடுதலைப்புலிகளுடைய அதிதீவிர வளர்ச்சி இலங்கையில் இருக்க, இன்னுமொரு நாடு உருவாகிவிடும் என்ற அச்சம் காரணமாக சர்வதேச நாடுகள் தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தக் காரணமாக இருந்தது. அதனையே இலங்கை அரசு தனக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொண்டது. இதன் காரணமாகவே இன்று வரை சர்வதேச மட்டத்திலும் இலங்கை அரசு விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகள் எனக் கூறிவருகிறது. ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் பேர் கொலை செய்யப்பட்டார்கள் என்றும், 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டார்கள் எனவும் கூறப்படுகிறது. தமிழினம் இந்த நாட்டில் சுதந்திரமாக நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காய் போராடிய விடுதலைப்புலிகளை அழித்தொழித்த சிங்கள அரசு, தமிழினம் என்றாலே பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி, மீளவும் விடுதலைப்புலிகளின் உருவாக்கம் ஆரம்பித்துவிடும் என்ற நிலைப்பாட்டில் தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம் என்ற விடயத்தில் இன்று வரை அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றது.

காலப்போக்கில் மாகாணசபை கூட இயங்காது போகலாம். அமைச்சரவைகளுக்கு அதிகாரத்தை கூட்டுகின்ற நடவடிக்கைகளும், அமைச்சர்களின் எண்ணிக்கையை கூட்டுகின்ற நடவடிக்கைகளும் திரை மறைவில் இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது. ஆனாலும் இந்திய அரசாங்கமானது மாகாண சபையை கொண்டு வருவதில் மும்முரமாக செயற்படுகிறது. மாகாண சபை முறைமையை மீண்டும் கொண்டு வருவதாக இருந்தால் 13ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு உள்ளது. ஆனாலும் தற்பொழுது மாகாண சபைகள் ஆளுநர்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. ஆகவே மீண்டும் மாகாண சபைத் தேர்தலை நடத்தி மாகாணசபை அதிகாரங்களையும் அரசாங்கம் கைப்பற்றிக்கொள்வதற்கான சூழலையும் ஏற்டுத்திக்கொள்ளும். அதிலும் தான் சார்ந்தவர்களையே நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும். இதிலே தமிழ்த் தரப்பு என்ன செய்யப்போகின்றது என்ற கேள்வியும் எழும்.

ஆகவே தற்போதைய அரசாங்கமானது தனது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையில் இருந்து மாற்றம் பெறவில்லை. மாற்றம் பெறாத வரையிலும் தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் என்பது சாத்தியமற்றதொன்றே. அரசாங்கத்தை மாற்றியமைக்கின்ற ஒரு நடவடிக்கையை மேற்கொண்டால் மட்டுமே தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம் என்பது சாத்தியமாகும். காரணம் பூகோள அரசியல் என்பது மிகவும் ஆபத்தானதொன்று. இதில் குறிப்பாக இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் தலையிட்டுள்ளன. ஆகவே அவர்களுடன் தமிழ்த் தரப்பு ஒரு சமரசத்தை உருவாக்குவதனூடாக மட்டுமே தமிழ் மக்களுக்கானத் தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும். ஜனாதிபதிகோட்டபாயராஜபக்சவினுடைய அரசாங்கத்தை நம்பி எந்தவித பயனும் இல்லை என்பதே இன்றைய நிலைப்பாடு.

நக்கீரன்

# 20வது திருத்தச்சட்டத்திலே தனி மனித செல்வாக்கு மேலோங்கியிருக்கிறது – முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன்


20வது சரத்திலே சில சரத்துகள் நீக்கப்பட்டுள்ளது. பொதுச் சேவை ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு போன்ற குழுக்களுக்கு முன்னர் ஜனாதிபதி தலையிட முடியாது. இந்தக் குழுக்கள் தன்னிச்சையாக செயற்பட அனுமதி முதல் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் 20வது திருத்தத்தின் மூலமாக இந்த ஆணைக்குழுக்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதனால் பாதிப்புக்கள் வரலாம் வராமலும் விடலாம். அதாவது ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக இரட்டை பிரஜா உரிமை இருப்பவர்கள் முதலில் தேர்தலில் களமிறங்க முடியாது. இந்த 20வது திருத்தச்சட்டத்தின் மூலமாக அவர்களும் தேர்தலில் போட்டியிடலாம் என்றால் அதில் பாதிப்பு என்னவெனில், பொதுவாக இங்க வாழும் நபர்களின் செல்வாக்கு என்பதை விட, அவர்களிடம் பணச் செல்வாக்கு, பணப் பிரயோகம் அதிகம் இருக்கும். அவர்கள் இங்கு வந்து தேர்தலில் வெற்றி பெற்று பதவிகளை எடுத்துக்கொண்டு அங்கும் இங்கும் வாழக்கூடிய நிலைமைகள் ஏற்படும். அப்படி ஏற்படுகின்ற போது இங்கு வாழும் மக்கள் அவர்களிடம் உரிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் பிரச்சினைகள் உருவாகும்.

இவ்விடயம் குறிப்பாக ஜனாதிபதியின் சகோதரர் பசில் ராஜபக்ஷ அவர்களுக்காகத் தான் கொண்டுவரப்பட்டது. எனினும் அவரை தேசியப் பட்டியல் ரீதியாக பாராளுமன்றத்திற்கு உள்வாங்குவதிலும் சட்டச் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கிறது. அதாவது தேசியப் பட்டியல் ரீதியாக ஒருவரை உள்வாங்கவேண்டுமெனில் அவர் தேர்தல் ஒன்றில் போட்டியிட்டவராக இருக்கவேண்டும் அல்லது தேசியப் பட்டியலில் அவரது பெயர் இருக்கவேண்டும். இவ்விரு விடயங்களிலும் அவரது பெயர் இல்லாமையினால் அவரை உள்வாங்குவதில் கால தாமதம் ஏற்படுகிறது. தேர்தல் ஆணைக்குழு என்பது இதுவரை காலமும் பொதுவாக இயங்கியது. தற்போதைய 20வது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு தான் விரும்பிய நபர்களை நியமிக்கப்போகின்றார். இவ்விடயம் நடக்கின்றபோது தேசியப் பட்டியலில் அவரது பெயர் இணைக்கப்படும். செல்வாக்கு அடிப்படையில் அவர் பாராளுமன்றத்திற்குள் பிரவேசிக்க வாய்ப்புகள் இருக்கின்றது. இந்தப் பிரச்சினை 20வது திருத்தச்சட்டத்தின் மூலமாக எழுகின்றது.

மக்களாட்சி ஜனநாயக பண்புகள் இல்லாமலாக்கப்பட்டு தனி நபர் செல்வாக்குகள் இந்த 20வது திருத்தச்சட்டத்தின் மூலமாக அதிகரிக்கப்படுவது என்பது இந்நாட்டில் வாழும் மக்களுக்கு பாரிய பிரச்சினைகளையே தோற்றுவிக்கும். குறிப்பாக சிறுபான்மை மக்கள் தொடர்ந்தும் அரசின் நெருக்குவாரங்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய சூழல் ஏற்படும் என்பதே உண்மை.



# வன்னி யுத்தத்தில் இரசாயன ஆயுதம்

கடந்தவாரத் தொடர்ச்சி...

முதலாவது: உலகமே ஏற்றுக்கொண்டுள்ள கிளஸ்டர் குண்டுகளுக்கு எதிரான சர்வதேச ஒப்பந்தத்தில் சிறிலங்கா அரசு இதுவரை கையெழுத்து இடவில்லை. அந்த ஒப்பந்தத்தை சிறிலங்கா ஏற்றுக்கொள்ளவும் இல்லை. இது, சிறிலங்கா தேசம் கொத்தணிக் குண்டுகளை தனது சண்டைகளின் பொழுது பாவிக்கும் நியாயத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இரண்டாவது: உலகமே கிளஸ்டர் குண்டுகளுக்கு எதிராக அணி திரண்டு நின்ற பொழுது, 2008 இல் கொத்தனிக் குண்டுகளுக்கு எதிராக டுப்பிளின் தீர்மானம் கொண்டுவரப்பட்ட நிலையில்தான் 2009ம் ஆண்டு ஏப்ரல் 4ம் திகதி முதல் மே 18 வரையிலான காலப்பகுதிகளில் கிளஸ்டர் மற்றும் இரசாயணக் குண்டுகளை சிறிலங்கா இராணுவம் பாவித்துள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

மேற்கூறப்பட்ட இரண்டு விடயங்களும் இந்த கிளஸ்டர் குண்டு விவகாரத்தை உலகத்தின் பார்வைக்கு உலகத் தமிழர் நகர்த்திச் செல்வதற்கு உதவக்கூடிய முக்கிய காரணிகள். வன்னி யுத்தத்தில் சிறிலங்கா இராணுவம் தடைசெய்யப்பட்ட குண்டுகளைப் பாவித்திருப்பதாக சர்வதேச அமைப்புக்களைச் சேர்ந்த அலென் பொஸ்டன் மற்றும் லோறா சீஸ்மன் போன்றவர்களின் கருத்துக்கள் மேலும் ஆதாரப்படுத்தப்பட்டு கிளஸ்டர் குண்டுப் பாவனைக்கு எதிராகப் போராடிய சர்வதேச அமைப்புகளின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்படவேண்டும். உலகத் தமிழ் அமைப்புக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் தமக்கிருக்கும் தனிப்பட்ட தொடர்புகளைப் பயன்படுத்தி இந்த விடயத்தை சர்வதேச ஊடகங்களின் கவனத்திற்கு கொண்டு செல்வது மிக மிக அவசியம்.


## தினமும் கேரட் சாப்பிட்டு வந்தால் உடலில் ஏற்படும் மாற்றங்கள்

ஒரஞ் நிறத்தில் கண்களைக் கவரும் கேரட்டுகள் பார்ப்பதற்கு மட்டுமல்ல சாப்பிடும்போதும் மொறு மொறுவென குறைந்த இனிப்புச் சுவையில் நன்றாக இருக்கும். கேரட்டில் நார்ச்சத்து, பொட்டாசியம், பீட்டா கரோட்டின் போன்றவை அதிக அளவில் உள்ளது. இதை தொடர்ந்து சாப்பிட்டால் உடலில் உள்ள அதிகப்படியான கொழுப்பு சத்து குறைக்கப்படும். உடலுக்கு குளிர்ச்சியை வழங்க கூடியவற்றில் கேரட் முதன்மையானது. தினமும் காலை எழுந்ததும் சுத்தமான தண்ணீரில் ஒரு முழு கேரட்டை கழுவி விட்டு சாப்பிட்டு வந்தால் உடல் சூடு குறையும். கத்தியால் வெட்டாமல் கடித்து சாப்பிடுவது நல்லது.

உயிர் சத்துகள் நிறைந்த கேரட்டை பச்சையாக உண்பது நல்லது. நார்ச்சத்து மற்றும் பொட்டாசியம் சத்துகளும் நிறைந்துள்ளதால் ஜீரணத்திற்கு உதவுகிறது. மாலைக் கண் நோயை தடுக்கும். ரத்தத்தில் உள்ள கொழுப்புச்சத்தை குறைக்கவும், புற்று நோயிலிருந்து காக்கவும் கேரட் உதவுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ரத்தத்தை சுத்தப்படுத்தவும், விருத்தி செய்யவும் பயன்படுகிறது. வாய் துர்நாற்றத்தை போக்கும். குடல் புண்கள் வராமல் தடுக்கும். கேரட்டில் விட்டமின் ஏ சத்து நிறைந்துள்ள காரணத்தால் இவை ஆரோக்கியமான கண்களுக்கும், சருமத்திற்கும், உடல் வளர்ச்சிக்கும் மிகவும் உதவுகின்றது. இதில் நிறைந்துள்ள பீட்டா கரோட்டீன் கொழுப்பை கரைக்கும் வல்லமை பெற்றது.


தினமும் காலையில் கேரட்டை நறுக்கி சிறிது உப்பு தூவி சாலட் போல செய்து சாப்பிடலாம். கேரட் ரத்தத்தை சுத்தப்படுத்தும். தினமும் ஒரு கேரட் சாப்பிட்டு வருவதால் தோல் சுருக்கங்கள் மெல்ல நீங்கி உடல் பொலிவு பெறும். காலை நேரங்களில் சர்க்கரை சேர்க்காமல் அரை டம்ளர் கேரட் ஜூஸ் குடிப்பதால் வயிற்று புழுக்கள் வெளியேறி, வயிறு சுத்தமாகும். தினமும் ஒரு கேரட் சாப்பிடுவதன் மூலம், உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளை அகற்றலாம். குடல் புண்கள் வராமல் தடுக்கிறது. கேரட் சாற்றுடன், எலுமிச்சை சாறு கலந்து சாப்பிட்டால் பித்த கோளாறு கள் நீங்கும். கேரட்டை வேக வைப்பதன் மூலம் அதன் கடினமான சுவர்களில் அடைபட்டிருக்கும் பீட்டா கரோட்டின் வெளி வருகிறது. கேரட்டை சமைக்கும் போது சிறிது வெண்ணெய் சேர்த்தால் அதன் மொத்த சத்தையும் உடல் நன்றாக எடுத்து கொள்ளும்.

பீட்டா கரோட்டின் நமது உடலுக்கு சென்றவுடன் விட்டமின் ஏ வாக மாறுகிறது. இது கண் பார்வையை தெளிவாக்குவதுடன் சரும பளபளப்புக்கும் உதவுகிறது. மாலைக்கண் நோய் வர பல காரணம் உண்டு. அதில் விட்டமின் ஏ குறைபாட்டால் இந்நோய் வந்தால் மட்டும் கேரட் குணமாக்கும்.





# பிராந்தியச் செய்திகள்



## வவுனியா சுகாதாரப் பிரிவினரால் உணவகங்களுக்கு விதிக்கப்பட்ட தடை, நீக்கம்

நாட்டில் அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தாக்கத்தால் சுகாதாரப் பிரிவினரின் கோரிக்கைக்கு அமைய வவுனியா மாவட்ட சுகாதாரப் பிரிவினர் கடந்த 5 ஆம் திகதி அன்று மாவட்டத்தில் உள்ள சகல உணவகங்கள் திறந்த வெளி உணவகங்கள், குளிர்பான நிலையங்கள் ஆகியவற்றில் அமர்ந்து உணவு உண்ணும் முறை தடை செய்யப்பட்டு இருந்த நிலையில் இத் தடையானது அன்று(2020.11.20) மாலை 5 மணி முதல் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார நடைமுறையை பேணி ஒரு மேசையில் இருவர் என்ற அடிப்படையில் செயல்படுமாறும் மற்றும் உணவகங்களுக்கு வருவோரின் பெயர் விபரங்களை பதிவு செய்யுமாறும் சுகாதாரப் பிரிவினர் உணவக உரிமையானவர்களை கேட்டுள்ளனர்.




## ஒரு மாதமாகத் தொடரும் ஊரடங்கால் வாழ்வாதாரம் இல்லை

கடந்த ஒரு மாதகாலமாகத் தொடரும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தினால் தமது வாழ்வாரம் முழுமையாக இழக்கப்பட்டுவிட்டதால். அரசாங்கம் தமக்கு நிவாரணம் வழங்க வேண்டும் எனக் கோரி மோதரை, இக்பாவத்தை பகுதி மக்கள் அளுத்மாவத்தை வீதியில் ஆர்பாட்டத்தை மேற்கொண்டுள்ளார்கள்.

அன்று(2020.11.21) காலை ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருப்பதாக அப்பகுதியிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் நிலைமைகளைக் கட்டுப்படுத்த முயன்றபோதிலும், அதிகளவு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அங்கிருந்து வெளியேறிவிட்டார்கள்.



தொடரும் ஊரடங்கால் தம்மால் தொழில் செய்ய முடியாதிருப்பதாகத் தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 5,000 ரூபா நிவாரணம் தமது குடும்பத்தின் தேவைகளுக்குப் போதுமானதாக இல்லாமையால் தாம் பட்டினி கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்கள்.

அரசாங்கம் உடனடியாகத் தமக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், சிறு குழந்தைகள், பெண்கள் வயோதிபர்கள் தொடரும் ஊரடங்கினால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருப்பதாகபவும் அவர்கள் தெரிவித்தார்கள். இது தொடர்பில் உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவருவதற்காகவே இந்த ஆர்ப்பாட்டத்தை நாம் நடத்துவதாகவும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

## இலங்கை போக்குவரத்து சபை விடுத்துள்ள முக்கிய அறிவித்தல்

அன்று21 ஆம் திகதி சனிக்கிழை மற்றும் நாளை 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழக்கம் போல் நீண்ட தூர பஸ் சேவைகள் இடம்பெற எதிர்பார்த்துள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

நாட்டின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கும் வகை யில் நீண்ட தூர பஸ் சேவைகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக சிங்கள ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளிலிருந்து பயணிகளை பஸ்களில் ஏற்றவோ அல்லது இறங்கவோ அனுமதிக்கப்படமாட்டாது.

ஏனைய பிரதேசங்களில் வழமை போல் பஸ் சேவைகளை முன்னெடுக்குமாறு டிப்போ அதிகாரிகளுக்கு அறிவுறுத் தப்பட்டுள்ளது.

இதற்கிடையில், பயணிகளின் வேண்டுகோள் மற்றும் பயன்பாட்டிற்காகக் குறித்த இரண்டு நாட்களுக்கு நீண்ட தூர பஸ் சேவைகள் மேற்கொள்ளப்படும் என்று லங்கா தனியார் பஸ் உரிமையாளர் சங்க தலைவர் கெமுனு விஜயவர்தன தெரிவித்தார்.

## உயர்தர பரீட்சை விடைத்தாள் திருத்தப்பணிகள் எதிர்வரும் புதனன்று ஆரம்பம்

2020 கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தப் பணிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, களுத்துறை, கம்பஹா மாவட்டங்களைத் தவிர நாட்டின் ஏனைய மாவட்டங்களில் வைத்து விடைத்தாள் திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார். சுகாதார அமைச்சின் ஆலோசனைக்கு அமைய இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
பரீட்சைத் திணைக்களம் - இலங்கை
Department of Examinations - Sri Lanka

## இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 19 ஆயிரத்தை தாண்டியது

நாட்டில் மேலும் 439 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அன்றைய(2020.11.20) தினம் திவுலபிட்டிய - பேலியகொட கொத் தணியில் 437 பேர் அடையாளம் காணப்பட்டனர். கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட நபர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி, திவுலபிட்டிய - பேலியகொட கொத்தணியில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 765 ஆக உயர்ந்துள்ளது. வெளிநாட்டில் வருகை தந்த கடற்படையினர் இருவர் கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதன்படி, இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 19 ஆயிரத்து 280 ஆக உயர்ந்துள்ளது.

நாட்டில் கொரோனா தொற்றால் மேலும் 377 பேர் அன்றைய (2020.11.20) தினம் குணமடைந்தனர். அத்துடன் நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகிக் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 271 ஆக அதிகரித்துள்ளது. தற்போது வைத்தியசாலைகளில் மற்றும் சிகிச்சை மையங்களில் 5 ஆயிரத்து 935 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதே வேளை, கொரோனா சந்தேகத்தில் 462பேர் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன் கொரோனா தொற்றால் இதுவரை 74 பேர் உயிரிழந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

## வடமேற்கு மாகாணத்தில் மீண்டும் பாடசாலைகள் திறக்கும் திட்டம்

இலங்கையில் பாடசாலைகள் எதிர்வரும் நவம்பர் 23ஆம் திகதி திறக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்திருக்கும் நிலையில் மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டிருந்த இந்நிலையில் வடமேல் மாகாணத்தில் கொரோனா அதிகமாக ஆபத்துள்ள பகுதிகளில் உள்ள பாடசாலைகள் நவம்பர் 23ஆம் திகதி திறக்கப்படாது என்று ஆளுநர் ராஜா கொலுரே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் குருநாகல், புத்தளம் மாவட்டங்களில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்து காணப்படுவதால் பாடசாலைகளை திறக்க மேலும் ஒருவாரம் ஆகும் என ஆளுநர் ராஜா கொலுரே தெரிவித்துள்ளார்.



# கொரோனாவுக்குப் பிந்திய உலக ஒழுங்கு! மாறிக் கொண்டிருக்கும் பூகோளப் போக்குகள் குறித்த சில பார்வைகள்

[சிராஜ் மஷ்ஹூர்]

**கடந்தவாரத் தொடர்ச்சி...**

இதன் காரணமாகவே சோவியத் யூனியனின் அதிகாரம், கிழக்கு ஐரோப்பா (Eastern Europe) வரை நீண்டது. கம்யூனிச இயக்கத்திற்கு சீனாவில் அரச அதிகாரத்தைக் கைப்பற்றும் வாய்ப்பு கிட்டியது. மறுபுறம் மேற்கு ஐரோப்பாவிடமிருந்து (Western Europe), அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் அதிகாரம் கைமாறியது(Shiftofpower). இவை இரண்டும் வல்லரசு நாடுகளாக (Super-powers) மாறின. இவை உலகப் போர்களின் விளைவுகளே. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், இவ்விரு வல்லரசுகளும் பாரியளவில் படை திரட்டி நேரடிப் போரில் களமிறங்கவில்லை. ஆனால், பிராந்தியளவில் நடக்கும் மோதல்களுக்கு (Regional Conflicts) அவை ஆதரவளித்தன.

இந்நாடுகளது நேரடி யுத்தத்திற்குப் பதிலாக இடம்பெறும் யுத்தமாதலால், இவை பதிலீட்டு யுத்தங்கள் (Proxy Wars) என அழைக்கப்பட்டன. நேரடி மோதல் இல்லாத ஆனால், வேறு வடிவில் போரிடும் இதுபோன்ற நிலையை, கெடுபிடிப்போர் அல்லதுபனிப்போர் (Cold War) என்று அழைப்பது வழக்கம்.

அமெரிக்கா தலைமையில் மேற்கு நாடுகள் (Western Bloc) அதாவது முதலாம் மண்டல நாடுகள் (First World) ஓரணியில் நின்றன. இவை தாராளவாத ஜனநாயக நாடுகளாக (Liberal Democratic Countries) இருந்தபோதிலும், தமது காலனியாக இருந்த சர்வாதிகார நாடுகளோடு கைகோர்த்திருந்தன. இது அமெரிக்க முகாம்.

கிழக்கு நாடுகள், சோவியத் ரஷ்யாவினதும் ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியினதும் தலைமையில் அணி சேர்ந்தன. இவை இரண்டாம் மண்டல நாடுகள் (Second World) மீது செல்வாக்கைக் கொண்டிருந்தன. இது ரஷ்ய முகாம். அமெரிக்கா வலதுசாரி நாடுகளையும் எழுச்சிகளையும் ஆதரித்தது. சோவியத் ரஷ்யா இடதுசாரி நாடுகளையும் புரட்சிகளையும் ஆதரித்தது. ஒருபுறம் அமெரிக்கா தலைமையில் நேட்டோ (NATO) ஒப்பந்தம், மறுபுறம் சோவியத் ரஷ்யா தலைமையில் வோர்சோ (WAR SAW) ஒப்பந்தம் என்று ஏட்டிக்குப் போட்டியாக உலக அரசியல் நகர்ந்தது.

*1945 – 1960*இற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குள் பெரும்பாலும் எல்லாக் காலனிய நாடுகளும் சுதந்திரம் பெற்றன. பின்னர், அவ்வாறு சுதந்திரம் பெற்ற மூன்றாம் மண்டல நாடுகள் (Third World Countries) அனைத்துமே, பனிப்போரின் போர்க்களங்களாக மாறிவிட்டன. இந்தப் பின்புலத்தில் தான் *1991* டிசம்பர் *26*இல் சோவியத் ரஷ்யா உடைந்து வீழ்கிறது. இன்னொரு வகையில் சொன்னால் வீழ்த்தப்படுகிறது.



இதற்கு உள்வெளிக் காரணங்கள் இரண்டுமே உள்ளன. பின்னர் அமெரிக்கா தனிக்காட்டு ராஜாவாக மாறுகிறது.

**பகுதி 04**
**சில பின்னணித் தகவல்கள் தொடர்கின்றன.**

**ஒற்றை மைய உலகும்** (Uni-polar World) **புதிய அமெரிக்க நூற்றாண்டுத் திட்டமும்** (PNAC)

ஒற்றையாட்சி (Unitary State) பற்றிக் கேள்விப்பட்டிருப்போம். அது ஒரு நாட்டுக்குரிய ஆட்சி முறை. இதுபோன்று, சர்வதேச அரங்கில் அமெரிக்காவே நடு நாயகமாக விளங்கும் என்றும், அதன் வல்லாதிக்கத்திற்கு சவால் விடக் கூடிய சக்திகள் பலவீனப்பட்டு, அதுவே தனிக் காட்டு ராஜாவாக விளங்கும் என்றும் கருதுகின்ற கதையாடலே 'ஒற்றை மைய உலகு' (Uni-polar World) என்ற சிந்தனையாகும்.

*1990*இல் சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப் பின்னர் அதாவது கெடுபிடி யுத்தத்திற்குப் பின்னர் உலக அரங்கில் அமெரிக்காவை மையப்படுத்தி, இக் கருத்தாக்கம் அதிகம் பேசப்பட்டது. அமெரிக்க வல்லாதிக்கத்தை *21*ஆம் நூற்றாண்டிலும் பேணிப் பாதுகாப்பதற்காக, புதிய அமெரிக்க நூற்றாண்டுத் திட்டம் (Project for a New American Century-PNAC) உருவாக்கப்பட்டது. உலகுக்கு அமெரிக்கத் தலைமைத்துவமே தேவை. அதுவே ஏனைய நாடுகளுக்கும் நன்மை தரும் என்று இது வாதித்தது.

**சீனாவின் எழுச்சி**

சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப் பிந்திய உலகப் போக்கில் சீனாவின் எழுச்சியும் அதன் பொருளாதாரப் பலமும் அசுர வளர்ச்சியும் மிகவும் குறிப்பிடத்தக்கவையாகும். இது அமெரிக்காவின் ஒற்றை மைய உலகு கனவுக்கு சவாலாக மாறியது. இதில் இப்போதைய ரஷ்யாவும் ஓரளவுக்கு சவாலாக இருக்கிறது.

**உலகமயமாக்கல்** (Globalization)

பல தளங்களில் பரஸ்பரம் ஒன்றிலொன்று தங்கியிருக்கும் (Interdependence) உலகளாவிய போக்கு சடுதியாக வளர்ந்து வந்தது அல்லது வளர்த்துவிடப்பட்டது. இதையே உலகமயமாக்கல் / பூகோளமயமாக்கல் என்கின்றனர். முதலீடு, கலாசாரம், சனத்தொகை என்பன வேகமாக இடைத் தொடர்புக்கு உள்ளானது. எல்லைகளைத் தாண்டிய வணிகம் (Cross - border trade), பொருட்கள் – சேவைகளின் பரிமாற்றம், தொழில்நுட்பம், மக்கள், மூலதனம், தகவல், கலாச்சாரப் பரிமாற்றம் என்பன உலகை ஒரு கிராமமாக (Global Village) மாற்றியிருக்கின்றன என்பர்.

**1980–90களில் ஏற்பட்ட மாற்றங்கள்**

*1980–90*களுக்குப் பிந்திய காலத்தில், உலக அளவில் பாரிய மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. பல தளங்களில் ஏற்பட்ட இம்மாற்றங்கள் முக்கியமான ஒரு திருப்புமுனை என்றால் அது மிகையல்ல. விஞ்ஞான – தொழில்நுட்பத்திலும் அறிவியலிலும் பல வளர்ச்சிகள் ஏற்பட்டன. ஊடகத் துறையில் பாரிய திருப்புமுனைகள் ஏற்பட்டன. தொலைக்காட்சியின் வீச்சு, புது ஊடகங்களின் (New Media) வரவு என்பன இதில் முக்கியமானவை.

உலக அளவில் பன்னாட்டுக் கொம்பனிகளும் பெருமுதலாளிய ஆதிக்கமும் (Corporate Dominance) அசாதாரண வளர்ச்சி கண்டது. அதீத நுகர்வுக் கலாச்சாரம் (Consumerism) தூண்டிவிடப்பட்டது. திறந்த / கட்டற்ற சமூகம் (Open / Free Society) தூண்டிவிடப்பட்டது. சமூக – பண்பாட்டுப் பெறுமானங்கள் (Socio - Political Values) மாற்றியமைக்கப்பட்டன. குடும்பக் கட்டமைப்பு சிதைக்கப்பட்டது. அதீத வறுமையின் (Extreme poverty) பிடிக்குள் பலர் சிக்கினர். உலகளாவிய கல்வி முறைமைகளும் போக்குகளும் மாறுதலுக்குள்ளாகின. பாதுகாப்பற்ற உலகில் வாழ்வதாக மக்கள் எண்ணத் தலைப்பட்டனர். இக் காலத்தில் எழுந்த சூழலியல் தொடர்பான கரிசனையும் மிக முக்கியமானது. இயற்கைச் சூழலை நாசம் செய்வது, உலகளவில் பாரிய சவாலாக உருவெடுத்துள்ளது. கலை, பண்பாட்டுத் தளத்திலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. விடுதலைப் போராட்டங்கள் வீறு பெற்றன. பெண்ணியம், விளிம்பு நிலைக் கதையாடல்கள் என்பன பரவலான கவனத்தை ஈர்த்தன. இப்படிப் பல.

**பகுதி 05**

*2000*ஆம் ஆண்டைச் சுற்றி, மிகப்பெரும் எதிர்பார்ப்புகள் உருவாக்கப்பட்டன. ஆனால், யதார்த்தத்தில் பெரிதாக ஒன்றுமே நடக்கவில்லை. சர்வதேச அளவில், பத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகள் (Millennium Development Goals-MDG) வரையப்பட்டு, *2000–2015* வரை அவை பேசப்பட்டன. அதில் பெரிய முன்னேற்றம் இல்லை. அதனால் *2016 – 2030* வரையான காலப்பகுதிக்கான நிலைத்து நிற்கும் அபிவிருத்தி இலக்குகள் (Sustainable Development Goals – SDG) வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்போது அது பற்றித்தான் பேசப்பட்டு வருகிறது. இதில் எந்த நடவடிக்கையுமே, வறுமையை ஒழிக்கவோ பொருளாதார ஏற்றத் தாழ்வைக்குறைக்கவோ பெரிதாகப் பங்களிக்கவில்லை. உலகளாவிய அரசாங்கங்கள் இதுபோன்ற விடயங்களில் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றிக்கொண்டே இருக்கின்றன.

**21ஆம் நூற்றாண்டு**

*2001*இல் தான் *21*ஆம் நூற்றாண்டு தொடங்குகிறது. அதே வருடம் செப்டம்பர் 11இல், அமெரிக்காவின் பொருளாதார இலக்கான இரட்டைக் கோபுரமும் பாதுகாப்பு மையமான பெண்டகனும் தாக்கப்படுகிறது. இந்தத் தாக்குதலின் பின்னணி மிகவும் தெளிவானது. செய்திகளில் காட்டப்பட்ட நபர்களுக்கு அப்பால், அதற்கு வேறு பின்புலம் உள்ளதாகவே பலரும் நம்புகின்றனர். உலகின் போக்கை மாற்ற எண்ணிய மறைகரங்களின் ஆபத்தான விளையாட்டே அது. *21*ஆம் நூற்றாண்டைச் சுற்றி எழுப்பப்பட்ட மாயைகள் இப்போது ஒவ்வொன்றாகத் தகர்ந்து கொண்டிருக்கின்றன.

*2004* ஆழிப்பேரலை அனைத்தையும் (சுனாமி), *2007–2009* காலப்பகுதியில் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளையும் இங்கு நினைவூட்டுவது பொருத்தமானது. ஒரு காலத்தில், *2020* இற்கான தொலைநோக்கு (Vision *2020*) பற்றிய கதைகளாலும் கனவுகளாலும் முழு உலகுமே பூரித்துப் போயிருந்தது. இப்போது *2020*ஐ அடைந்துவிட்டோம். கொரோனா நம்மையெல்லாம் ஒரு பிடி பிடித்திருக்கிறது. ஒட்டு மொத்த உலகுமே இப்போது நிச்சய மின்மையின் பாதையில்தான் (In the road of uncertainty) நகர்ந்து கொண்டிருக்கிறது.

**இனி என்ன நடக்கும்?**

*பகுதி 06*

**எதிர்காலவியல்** (Futurology)

எதிர்காலவியல் (Futurology) அல்லது எதிர்காலங்களின் கற்கைகள் (Futures Studies) இப்போது கல்விப் புலங்களில் ஒரு தனியான கற்கைத்துறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால், நம் நாட்டில் இது பற்றிய ஆர்வமும் அக்கறையும் குறைவாகவே உள்ளது.

தொடரும்...




## கழுத்து வலி காணாமல் போகனுமா? இதோ சில எளிய இயற்கை கை மருந்துகள்!

அன்றாடம் சந்திக்கும் ஒரு பிரச்சனைகளுள் கழுத்து வலியும் ஒன்றாகும். இதயத்தில் இருந்து மூளைக்கும், மூளையில் இருந்து உடம்போடு மற்ற இடங்களுக்கும் ரத்தத்தை கொண்டு செல்கின்ற நரம்புகள் கழுத்து பகுதியில் தான் உள்ளது. அந்த நரம்புகள் பாதிப்புக்குள்ளாகும் போது தான் கழுத்து வலி ஏற்படுகிறது அதனை சாதாரண வலி என்று நினைத்து விட்டாலோ அல்லது வெறும் வலி நிவாரணிகள் எடுத்தாலோ நிச்சயம் கழுத்து வலி தொடர் கதையாகிவிடும். இதனை ஆரம்பத்திலே சரி செய்ய சில கை மருந்துகள் உள்ளன. தற்போது அவை என்னென்ன என்பதை பார்ப்போம்.

ஐஸ் கட்டியை எடுத்து ஒரு துண்டில் சுற்றி வலி இருக்கும் இடத்தில் அந்த துண்டை வைத்து ஒத்தி எடுக்கவும். 2 நிமிடம் தொடர்ந்து இதனை செய்யதால் கழுத்து வலி குணமாகும்.

நொச்சி இலையை நல்லெண்ணையில் போட்டு காய்ச்சி அதை தலைக்கு தேய்த்து அரைமணி நேரம் கழித்து வெந்நீரில் குளியுங்கள்.



இரவு வேளையில் கண்டதிப்பிலியை இடித்து பால், நீர் சேர்த்து வேக வைத்து பனங்கற்பண்டு அல்லது நாட்டு சர்க்கரை சேர்த்து சாப்பிட்டால் கழுத்துவலி காணாமல் போகும்.

ஒரு டிஷ்யூ பேப்பரை வினிகரில் முக்கி எடுத்து கழுத்தில் வைக்கவும். ஒரு மணி நேரம் கழித்து அதனை எடுத்து விடலாம். ஒரு நாளில் 2 முறை இதனை செய்து கழுத்து வலியில் இருந்து விடுதலை அடையலாம்.

மஞ்சள் ஒரு டம்ளர் மாட்டுப் பாலை வெதுவெதுப்பாக சூடேற்றிக் கொள்ள வேண்டும். பின் அதில் 2 டீஸ்பூன் மஞ்சள் தூள் சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். சுவைக்கு வேண்டுமானால் தேன் சேர்த்துக் கொள்ளலாம். இதனை தினமும் இரவில் படுக்கும் முன் குடிக்க வேண்டும். இப்படி ஒரு வாரம் தொடர்ந்து குடித்து வந்தால், கழுத்து வலி போய்விடும்.

2 டேபிள் ஸ்பூன் ஆலிவ் ஆயிலை சூடேற்றி இறக்கிக் கொள்ள வேண்டும். பின் அதில் 1 டீஸ்பூன் மிளகுத் தூளை சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். பின்பு அந்த கலவையை வலியுள்ள கழுத்துப் பகுதியில் தடவுங்கள். இதை தினமும் 2 முறை என ஒரு வாரம் தொடர்ந்து பயன்படுத்தினால், கழுத்து வலி போய்விடும்.

விரல் அளவுள்ள இஞ்சியின் தோலை நீக்கிவிட்டு நன்கு கழுவி, துருவிக் கொள்ள வேண்டும். பின் ஒரு டம்ளர் நீரை பாத்திரத்தில் ஊற்றி கொதிக்க வைத்து இறக்கி, அதில் துருவிய இஞ்சியை சேர்த்து 3 நிமிடம் ஊற வைக்க வேண்டும். பின்பு அதனை வடிகட்டி, அதில் 1 டீஸ்பூன் தேன் சேர்த்து கலந்து, சூடாக குடிக்க வேண்டும். இந்த இஞ்சி டீயை தினமும் 2 முறை என ஒரு வாரம் தொடர்ந்து குடித்து வர, கழுத்து வலி போய்விடும்.

சில துளிகள் ரோஸ்மேரி ஆயிலை வலியுள்ள கழுத்துப் பகுதியில் தடவ வேண்டும். பின் 10 நிமிடம் மென்மையாக மசாஜ் செய்ய வேண்டும். இந்த முறையை தினமும் 2-3 முறை என ஒரு வாரம் தொடர்ந்து செய்து வர, கழுத்து வலி காணாமல் போகும்.

## தாயாய் கவிஞன்



இனிய கவிதையின் படைப்பு ஒரு
பிரசவ வேதனை தான்
கடவுளின் வேலை நடைபெறுகிறது
அங்கே இருட்டறையில்
கருவை உருவாக்கி கை,கால்
கொடுத்து உலாவ விட
உயிர் கொடுக்கும் ஒப்பற்ற வேலை
செய்பவள் தாய்...

அச்சில் ஏறி,
அடுத்தவர் எடுத்து உச்சி முகர்ந்து,
படைத்தவனை பலர் அறியச் செய்யும்
போது,
பரிபூரணமாய் தாயாகிறான் கவிஞன்...

-கிஷா-

## நட்பு



உயிர் வாழும் போதே
பிரிய மறுப்பது
உயிர் பிரிந்த போதே
உடன் மறப்பது
விதி கூட இவர்களை
வாழ விடாது
இதற்கு பிறகும் ஏன்...

இரணியன்

## முட்டி கருப்பை எளிதில போக்க இதோ சூப்பரான டிப்ஸ்!

மூட்டுகளில் கருமைகள் இருப்பதால் இளம்பெண்கள் அதிகமாகவே அவஸ்தைபடுகிறார்கள். இதனை போக்க கண்ட கண்ட கிரீம்களை வாங்கி தான் போட வேண்டும் என்ற அவசியமில்லை. வீட்டில் இருக்கும் சில பொருட்களை கொண்டு எளிய முறையில் இதுபோன்ற பிரச்சினைகளிலிருந்து விடுபடலாம். தற்போது அவை என்னென்ன என்பதை பார்ப்போம்.

காய்ச்சாத பாலுடன் பேக்கிங் சோடாவை கலந்து குழைத்து முட்டி கருப்பு இருக்கும் இடங்களில் தேய்க்கவும். வட்ட வடிவில் மசாஜ் செய்து விடவும். இயன்றவரை 10 முதல் 15 நிமிடங்கள் வரை மென்மையாக மசாஜ் செய்து விடவும். இது முட்டி கருமையை போக்குவதோடு சருமத்தில் இறந்த செல்கள் வெளியேறவும் உதவுகிறது.

எலுமிச்சையை இரண்டாக நறுக்கி சாறை இலேசாக வெளியேற்றி நீர் அல்லது பன்னீர் கலந்து எலுமிச்சை தோலை அப்படியே சருமத்தில் முட்டியின் மீது வைத்து சில நிமிடங்கள் வரை தேய்க்கவும். பிறகு 15 நிமிடங்கள் கழித்து மிதமான நீரில் கழுவி எடுத்தால் போதும். வாரத்துக்கு மூன்று முறையாவது இதை செய்து வந்தால் முட்டி கருமை நிறம் நீங்கும்.

தக்காளியை இரண்டாக நறுக்கி அப்படியே சாறோடு கை மூட்டுகளில் தேய்த்து மசாஜ் செய்து அப்படியே 20 நிமிடங்கள் விட வேண்டும். பிறகு மிதமான நீரில் கழுவி எடுத்தால் கருமை நீங்கும். எப்போதும் இதை செய்யலாம். தினமும் இரண்டு வேளை கூட செய்யலாம்.

மஞ்சளுடன் தேன் கலந்து நன்றாக பேஸ்ட் போல் குழைத்து முட்டி மீது தடவி பற்று போல் போட்டு மசாஜ் செய்யலாம். பிறகு 20 நிமிடங்கள் வரை வைத்திருந்து கழுவினால் நாளடைவில் கருமை குறையும்.

உருளைக்கிழங்கை நறுக்கி சாறோடு தேய்க்கலாம். அல்லது சாறை பிழிந்து அதில் சுத்தமான பஞ்சு தோய்த்து மூட்டுகள் இருக்கும் இடத்தில் வட்ட வடிவில் மசாஜ் செய்து விடவும். சாறு உலர்ந்த பிறகு மீண்டும் மீண்டும் அதை தடவி பிறகு சுத்தமான துணியால் துடைத்து க்ரீம் வகைகளை தடவினால் போதும். கருப்பு நிறம் மறைவதோடு முட்டி சொரசொரப்பும் போகும்.

ஆலிவ் எண்ணெயுடன் சரக்கரை சேர்த்து குழைத்து உடனடியாக முட்டியில் தேய்க்கவும். தினமும் இதை செய்யலாம். குளியலுக்கு முன்பு இதை செய்து வரலாம். தொடர்ந்து செய்து வந்தால் கருமை மறைவதை பார்க்கலாம்.



தொகுப்பு :- சப்தஹி

# கானல் மீன்கள்



(ராம சீதா)

கடந்தவாரத் தொடர்ச்சி...

விமலுக்கு எப்போதும் பெண்கள் மீது ஒரு சந்தேகம் இருந்துகொண்டே இருக்கும். அவர்களை அடிமைப்படுத்தி ஆட்சிசெய்யவேண்டும் என்னும் கொள்கை அவனிடமிருந்தது. தன்னை போல காதலிக்கும் தனது நண்பர்களிடமும் இது பற்றியே கதைப்பான். அதன் விளைவே பபோதாவை விமல் இழக்க நேரிட்டது. அவனை விலகி பபோதா இருந்தாலும் காதலே வாழ்க்கையின் முழு அர்த்தங்களையும் தரக்கூடியது என்ற எண்ணத்தில் உடைந்துபோன அவளது உள்ளத்திற்கு ஒரு புதிய உறவை அவளது பெற்றோர் ஏற்படுத்திக் கொடுத்தனர்.பபோதாவின் தந்தை தனது நெருங்கிய நண்பரின் மகன் சுனிலை இவளுக்கு மணம் பேச விருப்பம் தெரிவித்து, இரு வீட்டாரின் அனுமதி யுடன், இவளது பல்கலைக்கழக கல்வி முடிந்ததும் திருமணம் செய்து வைக்க எத்தனித்து இவர்களுக்கிடையில் பரஸ்பரம் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்த வழியமைத்தனர்.

இப்பொழுது பபோதாவிற்கு எங்கு திரும்பினாலும் காதல் உணர்வின் இன்பம். தினமும் ஆறுமணி நேர அழைபேசி உரையாடல். தனது பெண்மையின் அனைத்து ஆசைகளையும் ஏக்கங்களையும் இவனே எனது கணவன் என சரணடைந்து சமர்ப்பித்தாள். "என்னை கைவிடமாட்டிங்கதானே, ஆண் களையே என்னால நம்ப முடியல. சந்தேகம், பொய், ஏமாற்றம் - எனக்கு பயமா இருக்கு. அன்பா கடைசிவரையும் இருப்பிங்களா!!" பயம் கலந்த நம்பிக்கையுடன் புதிய காதலனுடன் உரையாடு வாள். அவனும் உன்னை ஏமாற்ற மாட்டேன் என வாக்குறுதி அளித்து அவளுடைய காதலை போஷித்தான், கொண்டாடினான். அவளால் பாதிதான் ஆண்களை நம்ப முடிந்தது. விடுதியில் தனி மையில் இருக்கும்போதெல்லாம் மீண்டும் தன்னை யாரும் ஏமாற்றிவிடுவார்களோ என்ற பயத்தில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு, தோல்வியை தழுவி பின் வைத்தியர் ஒருவரிடம் ஆலோசனைப் பெற்று மகிழ்ச்சியான வாழ்க்கையை தேட முற்பட்டாள். தினம் தினம் அவளது சிந்தனை பெற்றோர், பல்கலைக்கழக கல்வி, சமூக யதார்த்தம், தொழில்வாய்ப்பு - அப்பாற்பட்டு சிந்திப்பதற்கு மட்டுமே இடந்தந்தது.

காதலும் காதலனுமே வாழ்க்கை என்ற முழு உணர்வின் மாயவலை யில் சிக்குண்டு இலட்சிய பாதையை வகுக்காமல் தன்னை எப்பொழுதும் காதலனுக்கான காதலியாக மாற்றிக்கொண்டாள். திடீரென அவள் தனது காதலனிடம் தான் ஏற்கனவே ஒப்படைத்திருந்த மடிக்கணனியை திருப்பி தன்னிடம் தந்தால் உதவியாக இருக்குமென கேட்டபொழுது அவன் காரணமின்றி கோபப்பட்டு அவளைவிட்டு பிரிகின்றான். தொலைபேசிஅழைப்புக்களையும் துண்டித்துவிட்டு இன்னுமொரு பெண்ணுடன் முகப்புத்தகத்தில் புகைப்படங்களை பதிவிடு கின்றான். இரண்டாவது காதல னிடம் அவள் மடிக்கணனியை கேட்டதல்ல கோபம். பபோதா ஒரு பல்கலைக்கழக மாணவி. ஆனால் அவளது இரண்டாவது காதலன் ஓர் ஆசிரியர். இவளது படிப்பு முடியும் வரை காத்திருந்து பின் தொழில் தேடி திருமணம் நடத்துவது சரி வராது என்பதை உணர்ந்து மிக நீண்ட காலமாக திட்டம் தீட்டி பபோதாவை சமயம் பார்த்து பிரிவை ஏற்படுத்தவேண்டும் என்னும் நோக்கத்திலேயே அவன் இருந்ததை பபோதாவிற்கு நெருங்கிய உறவினர் மூலம் தகவல் கிடைத்தது. மனம் தாங்க முடியாத அவள் ஆண்கள் மீது வெறுப்பு கொண்டு அன்பின் ஏக்கத்தில் தற்கொலை முயற்சி செய்து வாழ்வின் சுமைகளை மறுபடியும் ஏற்று மரணத்தை வெற்றி கொண்டு வீட்டிலுள்ளவர்களை நடை பிணமாக்கி மஞ்சமே தஞ்சமென, உயிருடன் உணர்வற்று கிடக்கிறாள்.

காதலன் பெரிது என்று நினைத்து இத்தனை காலமும் தன்னை வளர்த்து அன்பை சொறிந்த பெற்றோர்களை துறக்க அவள் முடிவு செய்ததால் பெற்றோருக்கும் அவளுக்கும் இடையிலான பிணைப்பு உடைந்தது. நேரத்திற்கு உணவு மட்டும் அவளைத் தேடி அறைக்கதவை தட்டும். நண்பர்களின் தொடர்பு, கல்வி அந்நியமாகியது. இப்பொழுது பபோதா வாழ்க்கையை வெறுத்து தனிமையில் நடைபிணமாக திரிகின்றாள். ஆண்களை, காதலை வெறுத்தாள். அன்பிற்காக ஏங்கினாள். விரிவு ரைகளில் கலந்துகொள்ளாமல் தனிமையில் அமர்ந்து சிந்திப்பாள். சக நண்பர்கள் தனது காதலன் - காதலியுடன் உரையாடும்போது ஏக்க பெருமூச்சுவிட்டு துடித்தாள். யாரையும் நம்பிவிடக்கூடாது என்ற எண்ணத்தில் உறுதியாக இருக்கின்றாள். நிம்மதி யற்று தவிக்கிறாள்.

தனது மனநிலையை பழைய நிலைமைக்கு கொண்டு செல்வதற்காக பூக்கள் நடுதல், தியானம் செய்தல், பகுதி நேர வேலைக்குச் செல்லுதல், பெற்றோருடன் அன்பாக பழகுதல் என தன்னைமாற்றிக்கொண்டாள். பபோதா. வாழ்க்கை பாதை யில் பயணிக்கும்போது அன்பு தேவை முறையாக நிறை வேற்றப்படவில்லை என்றால் ஒரு பிள்ளை அன்பின் ஆறுதலை அரவணைக்க ஒருவரை நாடி விடுவது இயல்பு என உளவியல் கூறுகின்றது. பபோதாவின் நிலை மையும் அதுதான். காதலை முழு மூச்சாக அவள் ஆராதிப்பதற்கு சிறுவயதில் பெற்றோரின் உரிய அன்பு கிடைக்காததே ஒரு முக்கிய காரணமாக அமைந்துவிட்டது. ஐந்து வயதில் தனி அறையில் உறங்குவதும் தன்னுடைய வேலைகளை தானே செய்து கொள்வதும் என தனிமையின் வெறுமையில் பெற்றோரின் ஆதரவின்றி தவித்தாள். அவளது பெற்றோர் இரண்டு ஆண் குழந்தைகளை பெற்றுக்கொண்டு அவர்களை பராமரிப்பதில் முழு ஈடுபாட்டுடன் இருந்தனர். இடைக்கிடை பபோதா மீது அன்புச் சாரல் பனித்துளியளவு உடலையும், உள்ளத்தையும் நனைத்தாலும் அவளுக்கு அது போதுமானதாக இல்லை. பாலைவனத்தில் விழும் இரண்டு துளி நீருக்கு மதிப்பில்லைதானே? வெறும் ஐந்து வயதில் தான் இப்படி இருக்கவேண்டுமா? என்ற கேள்வி, பெற்றோர் மீதான வெறுப்பு, அவளை இன்று தனக்கு கட்டாயம் ஒரு ஆண் துணை வேண்டும் என்ற நிலைக்கு அவளை தள்ளிவிட்டது. தோல்வியை தந்தது. பாவம் படிப்பறிவற்ற பெற்றோருக்கு இது பற்றிய அறிவு எதுவும் இல்லை. அவளை பரிசோதித்த வைத்தியர்கள் பலரும் உடல் ஆரோக்கியமாக இருந்தாலும் "நீ ஒரு உளநோயாளி, மருத்துவ ஆலோசணை எடுப்பதே நன்று" என்று உறுதியளித்து சான்றிதழ் வழங்கினர். வெளிப்பார்வைக்கு அவள் ஒரு பல்கலைக்கழக மாணவியாக தன்னுடைய தேவைகளை தானே தனியாக நின்று பூர்த்திசெய்பவளாக இருந்தாலும் அவளது உள்ளம் அன்பிற்காக, ஆண் துணைக்காக ஏங்கித்தவித்தது. படிப்பறிவற்ற

சிறுகதை

பெற்றோராலும் சுற்றத்தவராலும் அவளது பிரச்சினைக்கு தீர்வு எட்ட முடியாது போனது.

இப்பொழுது பபோதா நேரத்திற்கு உணவு உண்கிறாள். தன்னை புதிய ஆன்மாவாக மாற்றிட முயற்சிக்கிறாள். மீண்டும் மீண்டும் அவளது முயற்சி ஆண்களை வெறுக்க எத்தனிக்கிறது. ஆனால் மனது இன்னுமொரு உறவை மூன்றாவது முறையும் தேடி அலைகிறது. இலையுதிர் காலமும் வசந்த காலமும் இயற்கைக்கு மட்டுமல்ல மனித வாழ்விலும் உண்டு என்பது போல பபோதாவிற்கு இன்றைய நாள் வசந்த காலமாக மாறியிருந்தது. இவளது நிலைமையைக் கண்டு பரிதாபம் கொண்டு அவளை திருமணம் செய்துகொள்ள பபோதாவின் நெருங்கிய நண்பன் முன்வருகின்றான். ஆரம்பத்தில் அவனது விருப்பத்தை மறு தளித்தாலும் அவனது வார்த்தை கள் அவளை அவனிடம் நம்பிக்கை கொள்ளச் செய்தது. "பபோ" நான் உன்னை இரண்டு வருடங்களாக காதலிக்கிறேன். அதை சொல்ல முற்பட்டபோது நீ வேறொருவருடன் பழகுவதை அறிந்தபின் கைவிட்டுவிட்டேன். நான் உன்னை திருமணம் செய்து கொள்கிறேன். நீ நம்பவில்லையென்றால் முதலில் திருமணம் செய்துகொண்டு பிறகு படிப்போம்!......!" அவனது கண்கள் கலங்குவதை கண்டு பயங்கலந்த மகிழ்ச்சியுடன் அவன் காதலை ஏற்றுக்கொள்கின்றாள். தனது பெற்றோரிடம் இது பற்றி பேச கூச்சமாக இருந்தாலும் தயக்கத்துடன் தன் விருப்பத்தை கூறுகின்றாள். மனம் தடுமாறி னாலும் விதிப்படி அனைத்தும் அரங்கேறட்டும் என்ற விரக்தியில் அவளது பெற்றோர் ஒப்புகொண்டனர். இரு வீட்டாரின் சம்மதத்துடன் மீண்டும் பபோதா சிறிசேன என்னும் ஆடவனை ஆராதிக்கிறாள். மறுபடியும் தொலைபேசி உரையாடல் ஒரு நாளைக்கி மூன்று வேளை யும் வருகிறது. பெண்மையின் ஏக்கங்களை, ஆசைகளை, எதிர்பார்ப்புக்களை பயங்கலந்த நம்பிக்கையுடன் மூன்றாவது காதலனிடம் பரிமாறுகின்றாள். இது நம்பிக்கையா? அவ நம்பிக்கையா?, வெற்றியா? தோல்வியா?, சரியா? பிழையா? பபோதாவிற்கு அதெல்லாம் பொருட்டல்ல. காதலன் ஒருவன் எப்பொழுதும் தன்னருகில் இருப்பதற்கான முயற்சியில் வெற்றிக் கண்டுவிட்டாள். அதோ மீண்டும் பூத்து குலுங்கி கூடு தேடும் பறவைகளுக்காக மாம ரம் இடந்தந்து, தானும் மகிழ்ச்சி ஆரவாரத்தில் காற்றில் சங்கீதம் பயில்கின்றது. பபோதா மரத்தின் அருகில் கதிரை ஒன்றில் அமர்ந்து தனது காதலனுக்கு அழை பேசியை எடுக்கின்றாள். கானல் நீரில் மீன்பிடிக்க முடியாது என்பது அவளுக்குத் தெரிந்தும் மனம் 'காதலே நிம்மதி' என்ற உணர்வில் சரணடைந்து உடைந்த தூண்டில்களை புதுப்பித்துக் கொண்டிருந்தது.

முற்றும்.

# வெலிக்கட சிறைச்சாலை படுகொலையின் ஒரு சாட்சியம்

## பேராசிரியர் நித்தியானந்தனின் நேர்காணல்



கடந்தவார தொடர்ச்சி....

மற்றைய அனைவரையும் அவர்கள் வெட்டி கொன்று முடித்துவிட்டதன் பின் அவர்கள் மேல் மாடிக்கு வந்து எங்களது சிறைக்கூடத்தை உடைக்க ஆரம்பித்தார்கள். என்ன செய்வது என்ற நிலையில் நாங்கள் இருந்தோமானலும் உடனடியாகவே நான் ஒரு ஸ்ரூலை உடைத்தேன் அது மிகப்பெரிய ஸ்ரூல் தான் ஆனால் சுலபமாக உடைக்கக்கூடியதாக இருந்தது. நானும் சாம் அவர் ஒரு மெதடிஸ் பாதர் ஆகவே அந்த நேரத்தில் இளைஞராக இருந்தது நாங்கள் தான். நானும் சாமும் அந்த தடிகளை உடைத்துக்கொண்டு கதவை நோக்கி பாய்ந்தோம் எங்களது கதவை உடைத்துவிட்டார்கள். கதவு திறபட்டுவிட்டது. ஆயுதங்களுடன் அவர்கள் நிற்கின்றார்கள் ஆனாலும் அவர்கள் உள்ளே வருவதற்கு அஞ்சினார்கள் எங்களது கைகளிலும் தடிகள் இருந்தது. தடிகளுடன் நானும் சாமும் எதிர்த்து தாக்க தொடங்கினோம் பாதர் சின்றாசும் ஜெயகுலராசாவும் ஏனைய இரண்டு தடிகளை எடுத்துக்கொண்டு பக்கத்திலே தாக்குதலுக்கு தயாராக இருந்தார்கள்.

எனவே நாங்கள் தடிகளுடன் திறந்திருந்த கதவுக்கு நடுவே நின்றேன். அப்பொழுது தான் இந்த அநியாய குறூரகொலை நடந்தது. எங்களுடன் Dr. ராஜசுந்தரம் இருந்தார். டேவிட் ஐயா இருந்தார். Dr. தர்மலிங்கம் இருந்தார். சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் இருந்தார்கள். கதவு திறபட்ட அந்த சமயத்தில் Dr. ராஜசுந்தரம் சிங்களத்திலே அவர்களோடு ஏய் மல்லி அபிடி கானவா என்று ஏன் எங்களை அடிக்க வருகின்றீர்கள் என்று அவர்களை கேட்டார். அந்த கேள்வியை புரிந்து கொல்லுகின்ற ஒரு கூட்டம் அல்ல அது கதவு திறந்த நேரத்தில் அவர் அதை பேச முற்பட்டபொழுது அவரை கையை பிடித்து வெளியே இழுத்தார்கள். அவர் பச்சை நிற வற்றிக் சாரத்தை அணிந்திருந்தார். 2 மணி என்றதால் நாங்கள் சாப்பிட்டுவிட்டு அகோரமான வெக்கையாக இருந்தமையால் நாங்கள் சட்டைகளை கழற்றிவிட்டு வெறும் சரங்களோடு மட்டுமே இருந்தோம். அவரை வெளியே இழுத்து எடுத்தார்கள். இழுத்து அவருடைய சாவு துரித கதியிலே நடைபெற்றது. தலையில் அடித்த ஒரே அடியிலே அவரது தலையில் இருந்து கோஸ் பைபில் இருந்து இரத்தம் சீறுவதைப்போல சீறியது.

**கேள்வி :** நினைவுகள் உண்மையிலே மிகவும் கவலைக்குறிய விடயம் அந்த சாட்சியாக நீங்கள் மட்டுமே எங்களுக்கு முன் இருக்கின்றீர்கள். 1983ஆம் ஆண்டு நினைவுகளை ஒவ்வொருவரும் நினைக்கும் பொழுதும் அந்த சோகங்கள் மனதிற்குள்ளே அப்பிக்கொண்டிருக்கிறது. ஏனெனில் நேரடியாக இடம்பெறுகின்ற இந்த கொடூரங்கள். கொலைகள் மனிதத்தின் மீதான தாக்குதல்கள் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்பது தான் தமிழர்கள் மத்தியிலே இருக்கின்ற ஒரு மிகப்பெரும் சோகமாக இருக்கின்றது. 1983 படுகொலைகளுக்கு பின்னராவது சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமை. அவர்களுக்கான மொழிப் பிரயோகத்திலாலான சுதந்திரம் அல்லது அவர்கள் வாழ்வதற்கான உரிமைகளை கொடுக்கின்றார்களா என்று கேட்டால் அது தொடர்ந்தும் இல்லை மறுக்கப்பட்டே வருகின்றது. ஆகவே இந்த நிலைமை ஜே.ஆர்.ஜெயவர்தனவினுடைய ஆட்சிக்காலத்தில் இருந்து ஆரம்பத்தில் சிங்கள சிறி போராட்டம் மற்றும் அதற்கு முதல் சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்து இடம்பெற்றிருக்கின்ற மிகப்பெரிய ஒரு நெருக்குதலுக்குள்ளான தமிழினம் தொடர்ந்தும் இந்த நெருக்குதலை அனுபவித்துக்கொண்டிருக்கிறது என்பது தான் ஒரு சோகமான விடயம். ஆகவே அதற்கு பின்னர் சிறைச்சாலையில் இருந்து சிறைக்கைதிகள் தான் இந்த படுகொலைகளில் ஈடுபட்டார்களா?

**பதில் :** உண்மையில் இது அரசாங்கத்தினுடைய பூரண அனுசரணை யோடு சிறை அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்புடன் நடைபெற்ற படுகொலை இது. இந்த படுகொலையை அவர்கள் திட்டவட்டமாக நிறுத்தியிருக்க முடியும். ஏனெனில் 800 சிறைக்கைதிகளை கொண்ட சிறைக்கூடத்திலே ஆயுதம் வைத்திருக்கின்ற அதிகாரம் அதிகாரிகளுக்கு உண்டு. இவர்கள் அச்சுறுத்தி இருந்தால்கூட அந்த காடயர்கள் கைதிகளினுடைய படுகொலைகளை அவர்கள் நிச்சயமாக நிறுத்தியிருக்க முடியும். கிட்டத்தட்ட வைத்தியர் ராஜசுந்தரம் கொலை செய்யப்பட்ட பின் அரை மணிநேரம் மூர்க்கமான தாக்குதலை நடத்த நேரிட்டது. உண்மையில் அந்த கேட் வாயினிலே இரத்தம் பரவ ஆரம்பித்தவுடன் அவர்கள் வெறுங்காலோடு வந்த கைதிகள் சிங்களவர்களின் கால்களிலே இரத்தம் உறைந்து சில நிமிடங்களிலே என்ன செய்யலாம் என அவர்கள் திணறிக்கொண்டிருந்த நேரத்திலே ஒருவர் அவரை வெளியே இழுத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். அரை மணி நேரம் நாங்கள் மூர்க்கமாக எதிர்த்து போராடிய பின் இராணுவம் உள்ளே நுழைந்ததன் பின் நாங்கள் கீழே கைகளை உயர்த்திய வண்ணம் மேல் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்த போது அந்த கீழுள்ள செல்களிலே இரத்தம் வடிய வடிய இருப்பதை பார்க்க முடிந்தது. இறுதி மூச்சை இழுத்துக்கொண்டிருந்த நிலையிலே அந்த இளைஞர்கள் மிகக்கொடூரமாக செல்லுக்குள்ளே கொல்லப்பட்டவர்களை இழுத்தெடுத்து ஒரு வீர சாகசங்களை நடத்தியதை போல அவர்கள் செல்லுக்கு வெளியிலே அவர்களை கொண்டு வந்து கிடத்தியிருந்தார்கள். அவர்களினுடைய முகம் மிகக்கொடூரமாக கோடரியால் சிதைக்கப்பட்டிருந்ததை பார்த்தோம். கிட்டத்தட்ட 53 அரசியல் கைதிகள் இரண்டு தினங்களில் கொல்லப்பட்ட மிகக்கொடூரமான கொலைகள் பற்றிய விசாரணைகூட வெலிகடையிலே நடைபெறவில்லை. லியோடி சில்வா என்ற சுப்பின் ஒப் ஒப்பரேசன் நடத்த முயன்ற விவாதம் கூட நடைபெறவில்லை. இன்று வரை அந்த கைதிகள் யார் என மிக இலகுவாக கண்டுபிடித்திருக்க முடியும். ஆனால் அதுபற்றிய எந்த விசாரணையும் இற்றை நாள் வரை கிட்டத்தட்ட ஒரு கால் நூற்றாண்டு நடைபெற்று முடிந்த பின்னரும் கூட குறித்த எந்த விசாரணையும் இல்லை. ஆகவே சென்னையில் தான் சில மனித உரிமைகள் சார்பிலே எங்களை என்ன நடந்தது என்று அறிய முற்படுவார்களே தவிர அரசு அது குறித்து எந்த வித அக்கறையும் கொள்ளவில்லை. ஏனெனில் அரசே முன்நின்று நடத்திய ஒரு கோர நாடகம் அது.

**கேள்வி :** ஏன் இந்த நினைவுகளை நாம் நினைவு கூற வேண்டும் என்ற கேள்வி ஒன்று எழுகின்றது. மீண்டும் மீண்டும் நாங்கள் ஏன் இதை நினைவு கூற வேண்டும்?

**பதில் :** உலகத்தில் இதுபோன்ற சிறுபான்மையின மக்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களை மறந்துவிடக்கூடாது என்பது தான். யாழ்ப்பாண நூல் நிலையம் எரிக்கப்பட்ட சம்பவமோ அல்லது இந்த படுகொலை நிகழ்ச்சிகளோ இன்னும் கூட தொடர்ந்து கொண்டிருக்கின்ற ஒரு நிலையில் நாம் அதை நினைவுகூற வேண்டியது ஒரு சமூக கூட்டத்தினுடைய ஒரு அம்சம் என்றே நான் நினைக்கின்றேன்.

**கேள்வி :** இந்த நினைவுகளை மட்டுமல்ல நீங்கள் இதனை முழுமையாக ஒரு எழுத்துப்பதிவாக நிச்சயமாக செய்ய வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. ஏனெனில் எங்களின் இனத்தினுடைய வரலாற்றின் ஒரு சாட்சியாக நீங்கள் இருக்கின்றீர்கள். ஆகவே உங்களுடைய இந்த அனுபவத்தை ஒரு எழுத்து மூலமாக பதிய வேண்டும். பொதுவாகவே இந்த நினைவுகள் எங்களது இளைய சமுதாயத்திற்கு அவர்கள் பட்ட கஷ்டங்களும் துன்பங்களும் அவர்களுடைய மன உணர்வுகளும் வெளிப்படையாக மிக விரிவாகவும் தெரியப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் எங்களுடைய இளைஞர்கள் இந்த விடயங்களைப் பற்றி தெரிந்து கொள்ளாமலே வாழ்ந்த கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கான உணர்வுகள் ஊட்டப்பட வேண்டும். ஏனெனில் ஆரம்பத்தில் நடைபெற்ற ஒவ்வொரு சிறுபான்மை இனங்கள் மீது இடம்பெற்ற இனப்படுகொலைகளும் இன்றும் கூட ஆபிரிக்கர்கள் தங்களுடைய நினைவுகளை மீண்டும் மீண்டும் தங்களது சந்ததியினருக்கு நினைவுபடுத்திக்கொண்டு இருக்கிறார்கள் எழுத்து மூலமாக மற்றும் அவர்களின் கதைகள் மூலமாக. அவ்வாறு தமிழ் குழந்தைகளுக்கும் இந்த விடயம் தொடர்பாக தெரியப்படுத்த வேண்டும்.

நீங்கள் கூறிய கருத்துக்கள் உள்ளத்தை தொடுகின்றன. ஆனால் இதற்குரிய எதிர்கால சட்டங்களை நாங்கள் வளர்க்க வேண்டும். எதிர்காலத்தில் என்றாவது ஒருநாள் சர்வதேச நீதிமன்றில் மனித இனத்திற்கு எதிராக கொடூரங்களை செய்தவர்களை தண்டிக்க வேண்டும். அதற்கு வேண்டிய ஆதாரங்கள் திரட்டப்பட வேண்டும். இது எப்பொழுது நடக்கும் என்று தெரியவில்லை. நடக்கின்ற வேளையில் நாங்கள் உயிருடன் இருப்போமோ தெரியவில்லை. ஆனால் சட்ட ரீதியாக ஒரு நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டிய வகையில் இந்த கருத்துக்கள் இந்த நேர்காணலில் நீங்கள் நேரிலே கண்ட கொடுமைகள் பதியப்பட வேண்டும். இதை செய்வதற்காக தனியொரு மனிதனாக உங்களால் இயன்ற நூலைஎழுதி உலகத்தில் உள்ள அத்தனை தீயவர்களுக்கும் பரப்ப முடியாது. இதற்கு தேவை ஒரு கற்றல் திறமை கொண்ட குழு அமைக்கப்பட்டு அந்த பணிகளில் அவர்கள் ஈடுபட வேண்டும். உண்மையில் எங்களுடைய இலங்கையிலுள்ள தமிழ் சட்டத்தரணிகளால் இதை செய்ய முடியுமோ தெரியவில்லை. காரணம் எங்கள் நாட்டில் எஞ்சியிருக்கின்ற அவர்களுடைய குடும்பங்களை கொலை செய்துவிடுவார்கள். ஒரு சட்டத்தரணிகள் குழு அமைத்து அந்த குழுவின் முன்னால் இத்தகைய உங்களைப்போன்று அனுபவமுடையவர்கள் அனுபவங்களை பதிய வேண்டும். எதிர்காலத்தில் மனித குலத்திற்கு எதிராக இத்தகைய கொடூரங்களை இழைத்தவர்கள் தண்டனைக்குரியவர்களாக்க வேண்டும். இத்தகைய நியாயங்களுக்குப்பின் பல வருடங்களிற்கு பின்னர் சர்வதேச நீதிமன்றங்களிலே குற்றவாளிகளை முன்கொண்டு வந்தார்கள். இத்தகையதொரு நிலையை உருவாக்குவதற்கு தமிழ் சமூகம் முன் வந்து வேண்டிய பணிகளை செய்ய வேண்டும் என்று கருதுகிறேன். இதைப்பற்றி உங்களது கருத்து என்ன?

**பதில் :** உண்மையில் இதுவொரு இலங்கை சங்காரத்தின் உச்சகட்ட படுகொலைகளாக இந்த படுகொலைகள் அமைகின்றன. உலக நீதிமன்றின் முன் இத்தகையதொரு இனப்படுகொலையை செய்த அரசு முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதிலே எந்த கருத்து வேறுபாடுமில்லை. ஆனால் அதற்காக நீண்ட விரிவான தயாரிப்புக்களை ஆற்றல் கொண்ட சட்டத்தரணிகள் நான் மட்டும் இல்லை இதிலிருந்து என்னுடன் வெளியேறிய வேறு பலர் இன்னும் உயிருடன் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் இணைத்து இந்த சாட்சியங்களை கோர்த்து பதிவு செய்ய வேண்டிய தேவை. கடமை நம்முன் உள்ளது என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

# அறிவியல் உலகம்

## 3டி தொழில்நுட்பத்தின் மூலம் மின்சார காரை தயாரித்து சாதனை

சுவீடனைச் தளமாகக் கொண்ட தொழிநுட்ப நிறுவனத்தில் பணிபுரியும் பொறியாளர்கள் பிரித்தானியாவில் 3டி தொழிநுட்பத்தின் மூலம் மின்சாரக் காரை தயாரித்து சாதனை படைத்துள்ளனர்.

முப்பரிமாணங்களில் அச்சிடும் இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்படும் பொருட்கள் 3டி தொழில்நுட்பம் என அழைக்கப்படுகிறது.

இம் முறையில் மறு சுழற்சி செய்யப்பட்ட பொருட்கள் மூலம் உருவாக்கப்பட்ட குறித்த மின்சாரக் காரினால் 45 நிமிடங்கள் வரை தொடர்ந்து பயணிக்க முடியும் எனக் கூறப்படுகின்றது.

மேலும் பட்டரி மூலம் இயங்கும் இக் காரானது 150 கிலோ கிராம் எடை கொண்டதுடன் அடுத்த 6 மாதங்களில் பயன்பாட்டுக்கு வரும் என அதனைத் தயாரித்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

பச்சோந்தி என பொருள்படும் வகையில் கெமிலியொன் (Chameleon) என இக் காருக்கு பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## கட்டுப்பாட்டினை நீக்கியுள்ள Zoom

தற்போதைய நிலையில் வீட்டிலிருந்து பணியாற்றும் பலரினாலும் உச்சரிக்கப்படும் வார்த்தையாக Zoom காணப்படுகிறது .வீடியோ கொன்பரன்ஸ் வசதியினை தரும் இச்சேவையில் இலவச சேவை மற்றும் கட்டணம் செலுத்தப்பட்ட சேவை என்பன காணப்படுகின்றன .

இலவச சேவையில் அதிகபட்சம் 40 நிமிடங்கள் வரையே வீடியோ கொன்பரன்ஷில் ஈடுபட முடியும் என Zoom நிறுவனம் அறிவித்துள்ளது. இந்நிலையில் இக்கட்டுப்பாட்டினை நீக்கவுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி நவம்பர் 26 ஆம் திகதி நள்ளிரவு முதல் 27 ஆம் திகதி காலை 6 மணி வரை இக்கட்டுப்பாடு நீக்கப்படவுள்ளது. இதற்கிடையிலான காலப்பகுதியில் எவ்வளவு நேரமானாலும் இலவசமாக வீடியோ கொன்பரன்ஷில் ஈடுபட முடியும்.

பல பாதுகாப்பு குறைபாடுகள் காணப்பட்ட நிலையிலும் தொடர்ந்தும் தம்முடன் தொடர்ந்து இணைந்திருக்கும் பயனாளர்களுக்காக இச்சலுகை வழங்கப்படவுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது .




## விண்வெளியில் மிதந்தவாறு ஆய்வுப் பணிகளை மேற்கொண்ட வீரர்கள்!

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து வெளியே வந்து இரு வீரர்கள் விண்வெளியில் மிதந்தவாறு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர்.

ரஷ்ய வீரர்களான செர்ஜி ரைஸிகோவ் மற்றும் செர்ஜி குட்ஸ்வெர்கோவ் ஆகியோர் சுமார் 6 மணி நேரம் அந்தரத்தில் மிதந்தபடி இவ் ஆபத்தான பணியைச் செய்து முடித்துள்ளனர்.

முன்னதாக இவ் வாரத்தின் ஆரம்பித்தில் அமெரிக்காவின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் மூலம் 4 வீரர்கள் சர்வதேச விண்வெளி மையத்திற்குச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## தொழிநுட்பக் கோளாறு காரணமாக புறப்பட்ட சிறிது நேரத்தில் வெடித்த வேகா ரொக்கெட்

தொழிநுட்பக் கோளாறு காரணமாக யூரோப்பியன் வேகா ரொக்கெட் (European Vega Rocket) புறப்பட்ட சிறிது நேரத்தில் பூமியில் விழுந்து வெடித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஏரியான்ஸ்பேஸ் நிறுவனத்தின் சார்பில் ஈரோப்பியன் வேகா விவி17 ரொக்கெட் பிரஞ்ச் கயானாவிலிருந்து ஏவப்பட்டது.

இவ் ரொக்கெட்டில் 280 மில்லியன் பவுண்டுகள் செலவில் உருவாக்கப்பட்ட இரு செயற்கைக் கோள்கள் பொருத்தப்பட்டிருந்தன.

விண்ணில் ஏவப்பட்ட சில நிமிடங்களில் ரொக்கெட்டின் 4 ஆவது பகுதியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக பூமியில் விழுந்து நொறுங்கியதாகக் கூறப்படுகிறது.



**பிரபஞ்சத்தை விட அபார சக்தி கொண்டது உன் மூளை! பிறகென்ன கவலை?**

டொக்டர்.அப்துல் கலாம்



# விளையாட்டு செய்திகள்

## தென் ஆபிரிக்க கிரிக்கெட் வீரர் ஒருவருக்கு கொவிட்-19 மூவர் தனிமைப்படுத்தலில்

தென் ஆபிரிக்க கிரிக்கெட் வீரர் ஒருவருக்கு கொவிட்-19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால் மூன்று வீரர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணியின் மருத்துவ ஊழியர்களுடன் நெருங்கிய தொடர்புள்ளவர்களாக கருதப்படும் மூவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அனைவரும் அறிகுறிகளை வெளிப்படுத்தவில்லை. ஆனால் அவர்களை மருத்துவர்கள் தொடர்ந்தும் கண்காணிப்பர் என்று கிரிக்கெட் தென் ஆபிரிக்கா ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.



## IPL போட்டியில் இருந்து கிறிஸ் கெயில் விலகல்

இலங்கை பிரீமியர் லீக் டி20 போட்டியில் இருந்து பிரபல கிரிக்கெட் வீரர் கிறிஸ் கெயில் விலகியுள்ளார். கொரோனா தொற்றுக் காரணமாக பிற்போடப்பட்ட இப்போட்டிகள் இம்மாதம் 27 ஆம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்நிலையில் IPL போட்டியிலிருந்து பிரபல கிரிக்கெட் வீரர் கிறிஸ் கெயில் விலகியுள்ளார். கண்டி டஸ்கர்ஸ் அணியில் இடம்பெற்றிருந்த கெயில், சொந்தக் காரணங்களால் விலகுவதாக அறிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற IPL போட்டியில் பங்கேற்ற கெயில், பஞ்சாப் அணிக்காக 7 ஆட்டங்களில் விளையாடி 288 ஓட்டங்களை எடுத்தார்.



## 2022 கொமன்வெல்த் போட்டியில் மகளிர் கிரிக்கெட் இணைப்பு!

முதன் முறையாக 2022ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் போட்டிகளில், மகளிர் இருபதுக்கு இருபது கிரிக்கெட் இணைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்தின் அறிவிப்பில், காமன்வெல்த் போட்டிகளை நடத்தவுள்ள பிரித்தானியாவுடன் இருபதுக்கு இருபது தரவரிசைப்பட்டியலில் முதல் 6 இடங்களை பிடித்துள்ள அணிகளும், தகுதிச்சுற்று அடிப்படையில் மேலும் ஒரு அணியும், தொடரில் பங்குபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




பிரித்தானியாவில் பர்மிங்ஹாமில், 2022ஆம் ஆண்டு ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 8ஆம் திகதி வரை கொமன்வெல்த் போட்டிகள் நடைபெறவுள்ளன.

## மகளிர் இருபதுக்கு இருபது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் ஒத்திவைப்பு !

2022 ஆம் ஆண்டு நடைபெற இருந்த மகளிர் இருபதுக்கு இருபது கிரிக்கெட் தொடர் 2023 ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்படுவதாக ஐசிசி அறிவித்துள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த ஐசிசி தலைமை செயல் அதிகாரி மனு சாவ்னே "மகளிர் இருபதுக்கு இருபது உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி 2023 ஆம் ஆண்டு ஒத்திவைக்கப்படுவதை சரியான முடிவாக கருதுகிறேன்.

இப் போட்டியை ஒத்திவைப்பதன் மூலம் வீராங்கனைகளுக்கு முறையான ஓய்வும் கிடைக்கும். இது மிகப்பெரிய போட்டி என்பதால் ஒவ்வொரு நாடும் போட்டிக்கு தயாராக போதிய நேரமும் கிடைக்கும்" என்றார்.

மேலும் "கொரோனா பாதிப்பு எல்லாம் முடிவடைந்து 2022 ஆம் ஆண்டு நடைபெற்றால் எத்தகைய உற்சாகம் இருக்குமோ அதே உற்சாகத்துடன் 2023 இல் இந்தப் போட்டி தொடர் நடைபெறும். மகளிர் கிரிக்கெட்டை உத்வேகப்படுத்தவும் ஊக்கப்படுத்தவும் அத்தனை முயற்சிகளையும் ஐசிசி தொடர்ந்து செய்யும்" என்றார் மனு சாவ்னே.



## உலகக் கிண்ண காற் பந்து தகுதி சுற்று: பிரேஸில், ஆர்ஜென்டினா அணிகள் வெற்றி

உலகக் கிண்ணக் காற்பந்து தகுதிச் சுற்று போட்டிகளில் பிரேஸில், ஆர்ஜென்டினா அணிகள் வெற்றி பெற்றன. உலகக் கிண்ணக் காற்பந்து தகுதிச் சுற்றில் பந்தை தட்டிப்பறிக்கும் முயற்சியில் 22ஆவது உலகக் கிண்ணக் காற்பந்துப் போட்டி கத்தாரில் 2022ஆம் ஆண்டில் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான தென்அமெரிக்க கண்டத்துக்குரிய அணிகளுக்கான தகுதி சுற்று போட்டி பல்வேறு இடங்களில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 10 அணிகளும் தங்களுக்குள் தலா 2 முறை மோத வேண்டும்.

லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் உலக கோப்பை போட்டிக்கு நேரடியாக தகுதி பெறும். 5ஆவது இடம் பிடிக்கும் அணி 'பிளே-ஆப்' சுற்று மூலம் வாய்ப்பை பெற முடியும்.

இந் நிலையில் உருகுவே தலைநகர் மோன்ட் வீடியோவில் இந்திய நேரப்படி அதிகாலை நடந்த தகுதி சுற்று ஆட்டம் ஒன்றில் 5 முறை சம்பியனான பிரேஸில் அணி, 2 தடவை சம்பியனான உருகுவேயை எதிர்கொண்டது.குறித்த போட்டியில் பிரேஸில் அணி 2-0 என்ற கோல் கணக்கில் உருகுவேயை வீழ்த்தியது.

மற்றொரு போட்டியில் முன்னாள் சம்பியனான ஆர்ஜென்டினா அணி, பெருவை அதன் சொந்த மண்ணில் சந்தித்தது. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் லயோனல் மெஸ்சி தலைமையிலான ஆர்ஜென்டினா 2-0 என்ற கோல் கணக்கில் பெருவை சாய்த்தது.



# உலக செய்திகள்

## முதியோருக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் ஒக்ஸ்போர்ட் தடுப்பூசி!

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டு வரும் கொரோனா தடுப்பூசி, முதியோருக்கு நோய் எதிர்ப்பு சக்தி அளிப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. பிரித்தானியாவிலுள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசி உருவாக்கும் பணி நடந்து வருகிறது.

இத் தடுப்பூசியை மருந்து நிறுவனமான அஸ்ட்ராசெனிகா உற்பத்தி செய்யும். இதற்காக இந்தியாவை சேர்ந்த சீரம் இன்ஸ்டிடியூட்டுடன் இணைந்துள்ளது. இதற்கிடையே, இந்த ஒக்ஸ்போர்டு தடுப்பூசி, இளம் வயதினரை விட முதியோருக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகம் அளிப்பதாகக் கூறப்படகின்றது. நல்ல ஆரோக்கியமான முதிய தன்னார்வலர்கள் 560 பேரை வைத்து ஆய்வு செய்யப்பட்டது. அதில், இளம் வயதினரை விட முதியோருக்கு பாதுகாப்பாகவும், எதிர்வினை குறைவாகவும் இருப்பது தெரிய வந்தது. அதாவது, முதியோருக்கு நல்ல நோய் எதிர்ப்பு சக்தியை உண்டாக்குகிறது. முதியோரை கொரோனா அதிகமாக தாக்குவதற்கு வாய்ப்பு இருப்பதால், இந்த கண்டுபிடிப்பு ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது என்று ஆராய்ச்சியாளர்களில் ஒருவரான டொக்டர் மகேஷி ராமசாமி தெரிவித்தார். அடுத்தபடியாக, இந்த தடுப்பூசி, கொரோனா வராமல் தடுக்குமா என்று 3ஆவது கட்ட பரிசோதனையில் ஆய்வு செய்து வருகிறார்கள். இதன் முடிவுகள், வரும் வாரங்களில் வெளியாகிறது.

இதன்மூலம், அமெரிக்காவை சேர்ந்த பைசர் நிறுவனத்தின் தடுப்பூசி, மாடர்னா நிறுவனத்தின் தடுப்பூசி, ரஷியாவை சேர்ந்த ஸ்புட்னிக் வி தடுப்பூசி, பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் தடுப்பூசி ஆகிய 4 தடுப்பூசிகள் செயற்திறன் கொண்டவையாக உருவெடுத்துள்ளன.



## உலக சுகாதார அமைப்பின் தலைவர் மீது எத்தியோப்பியா குற்றச்சாட்டு!

ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் அங்கமான உலக சுகாதார அமைப்பின் தலைவராகப் பொறுப்பு வகித்து வரும் டெட்ரோஸ் அதனோம் மீது, எத்தியோப்பியா குற்றச்சாட்டொன்றினை முன்வைத்துள்ளது. எத்தியோப்பியாவைச் சேர்ந்த டெட்ரெஸ் அதனோம், தங்கள் நாட்டில் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள டிக்ரே மாகாணத்துக்கு ஆதரவாக, பிற நாடுகளில் பிரசாரம் மேற்கொண்டு வருவதாக எத்தியோப்பியா குற்றம் சாட்டியுள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த எத்தியோப்பிய இராணுவ தலைமை தளபதி பிர்ஹானு ஜுலா கூறுகையில், "டிக்ரே மாகாணத்துக்கு எதிராக எத்தியோப்பிய இராணுவம் எடுத்து வரும் தாக்குதல் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துமாறு அண்டை நாடுகளிடம் டெட்ரெஸ் அதனோம் கூறி வருகிறார். டிக்ரே மாகாணப் படையினருக்கு ஆயுதங்களை வழங்கி உதவுமாறு அண்டை நாடுகளிடம் அவர் கேட்டு வருகிறார்" என குற்றஞ்சாட்டியுள்ளார். எத்தியோப்பிய ஆளும் கட்சிக் கூட்டணியில் மிக முக்கியப் பங்கு வகித்து வந்த டிக்ரே மக்கள் விடுதலை முன்னணி (டிபிஎல்எஃப்), நாட்டின் பிரதமராக அபை அகமது கடந்த 2018ஆம் பிரதமராகப் பொறுப்பேற்றுப் பிறகு மத்திய அரசாங்கத்தை எதிர்த்து வருகிறது.

இதனிடையே கொரோனா வைரஸ் நெருக்கடி காரணமாக அபை அகமது தேர்தல் நடத்துவதற்கு தடை விதித்திருந்த போதும், அதனையும் மீறி டிக்ரே மாகாணத்தில் கடந்த செப்டம்பர் மாதம் பேரவைத் தேர்தல் நடத்தப்பட்டது. இதனால், மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண அரசாங்கத்துக்கும் இடையே பதற்றத்தை ஏற்படுத்தியது. இந்த நிலையில், டிக்ரே மாகாணத்திலுள்ள இராணுவ நிலையொன்றின் மீது டிபிஎல்எஃப் படையினர் தாக்குதல் நடத்தியதாக கடந்த 4ஆம் திகதி குற்றம் சாட்டிய அபை அகமது, மாகாணப் படையினருக்கு எதிராகத் தாக்குதல் நடத்தும்படி இராணுவத்துக்கு உத்தரவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.




## அமெரிக்கா வரலாற்றிலேயே மிகவும் பொறுப்பற்ற ஜனாதிபதி டிரம்ப்

அமெரிக்க வரலாற்றிலேயே மிகவும் பொறுப்பற்ற ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் என புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜோ பைடன் தெரிவித்துள்ளார். தேர்தல் முடிவுகளிற்கு எதிரான டிரம்பின் குற்றச்சாட்டுகள் மோசமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை எனவும் அவர் தெரிவித்துள்ளார். தேர்தல் முடிவுகளை டிரம்ப் ஏற்க மறுப்பது அதிகார மாற்றத்தை தடுக்குமா என்பது குறித்து நான் கரிசனை கொண்டிருக்கவில்லை ஆனால் ஒரு நாடாக நாங்கள் யார் என்பது குறித்த தவறான செய்தியை இது தெரிவிக்கும் என பைடன் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதியின் தற்போதைய செயற்பாடுகள் காரணமாக அவர் அமெரிக்கா வரலாற்றில் மிகவும் பொறுப்பற்ற ஜனாதிபதி என பதிவாகப்போகின்றார் என பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கர்கள் நம்பமுடியாத பொறுப்பற்ற தன்மையை எதிர்கொண்டுள்ளனர்,எங்கள் ஜனநாயகம் எவ்வாறு செயற்படுகின்றது என்பது குறித்த நம்பமுடியாத அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் செய்திகள் உலக நாடுகளிற்கு சென்றுகொண்டிருக்கின்றன என பைடன் தெரிவித்துள்ளார்.டிரம்ப் நிர்வாகம் பல முக்கிய அமைப்புகளுடன் தாங்கள் தொடர்புகொள்வதற்கு அனுமதி மறுப்பதால் கொரோனா வைரசினை எதிர்கொள்வதற்கான திட்டங்களை தீட்டும் முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளன என பைடன் தெரிவித்துள்ளார்.



## வளி மாசடைவதால் மனநலம் பாதிக்கப்பட வாய்ப்பு

வளி மாசடைவதால் இனி வரும் காலங்களில் மனநலம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் மத்தியில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதற்கான முடிவுகள் American Geriatrics Society இதழில் வெளியிடப்பட்டுள்ளது. இவர்கள் அனைவருமே காற்று மாசு அதிகமுள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் குறித்த ஆய்வில் வளி மாசடைவதால் மனநலம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதோடு ஞாபக மறதி ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது.



குறிப்பாக முதியோருக்கே இது அதிகம் ஏற்படும் என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மனநலம் பாதிப்பு, தீவிரமாக இருக்காது என்றும் கூறப்பட்டுள்ளது. எனினும் தற்போது எந்த பாதிப்பும் இல்லை என்றும், இதேநிலை நீடித்தால் 10 ஆண்டுகளுக்கே பிறகு இதுபோன்ற பிரச்சனைகள் ஏற்படும் என்றும் குறிப்பிட்டுள்ளது. அதனால் காற்று மாசை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் அனைவரும் ஈடுபட வேண்டியது அவசியமாகிறது.

## 2030 ஆம் ஆண்டிலிருந்து பிரித்தானியாவில் பெட்ரோல், டீசல் கார்களுக்கு தடை..!

2030 ஆம் ஆண்டிலிருந்து பிரித்தானியாவில் பெட்ரோல் மற்றும் டீசல் கார்களுக்கு தடை விதிக்கப்படும் என அந் நாட்டுப் பிரதமர் போரிஸ் ஜேன்சன் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவின் புதிய பசுமை தொழிற்துறை புரட்சிக்கான திட்டங்களை பிரதமர்போரிஸ்ஜோன்சன்வெளியிட்டார். அதன் ஒரு பகுதியாக 2030ஆம் ஆண்டிலிருந்துபெட்ரோல் மற்றும் டீசல் கார்கள் மற்றும் வேன்களுக்கு தடை விதிக்கப்படும் என அவர் அறிவித்தார்.



இத் திட்டம் பிரித்தானியாவில் தேசிய உள்கட்டமைப்பை மின்சார வாகனங்களுக்கு சிறந்த ஆதரவாக மாற்றுவதில் கவனம் செலுத்தும். இதன் மூலம் வீதி போக்குவரத்தில் காபன் வாயுவின் அளவைக் குறைத்த முதல் 'ஜி7' நாடாக பிரித்தானியா திகழும் என்றும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# Fly Geyser

Fly Geyser என்பது அமெரிக்காவில் Gerlach என்னும் ஊரின் வடக்கு திசையாக 20 மைல் தூரத்தில் அமைந்துள்ள ஒரு வெந்நீர் ஊற்றாகும்.உலகின் ஆச்சரியத்தக்க இடங்களில் இதுவும் ஒன்றாகும்.இங்கு காணப்படும் வெந்நீர் ஊற்றானது மேல்நோக்கி 5 அடி உயரத்துக்கு பாய்வதே இதன் சிறப்பம்சமாகும். அத்துடன் இவ்வூற்றில் இருந்து வெளிப்படும் தாதுப்படிமங்களால் இவ்வூற்றை சுற்றி எரிமலை போன்ற குன்றுகள் காணப்படுகின்றன. மேலும் இதனை சுற்றி வெந்நீரில் வளரக்கூடிய பாசிகள் கண்ணுக்கு குளிர்ச்சியை தருவதனால் சுற்றுலா பயணிகளையும் வெகுவாக கவர்ந்துள்ளது.







## நவம்பர் 27 மாவீரர் தினம் அனுஷ்டிக்க அரசாங்கத்தினால் தடை

தமிழீழ விடுதலைப்போராட்டமானது தமிழினத்தின் விடுவிக்காக தங்கள் உயிர்களை தியாகம் செய்த உறவுகளை அஞ்சலி செலுத்த கூடாது என்று ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவினுடைய தலைமையிலான அரசாங்கம் நீதிமன்றத்தினூடாக தடை உத்தரவை பிறப்பித்திருக்கிறது. கடந்த காலங்களில் பல்வேறு பிரச்சனைகளுக்கு மத்தியிலும் மாவீரர் தினம் நினைவு கூறப்பட்டது. அதே நேரம் யுத்த வெற்றியை இராணுவத்தினம் அனுஷ்டித்து வருகின்றார்கள். ஆனால் இலங்கையில் நடந்த எந்த யுத்தத்திலும் இந்தியா, சீனா, அமெரிக்காவின் உதவிகளுடனேயே ஈழப்போரின் இறுதிக்கட்டமும் வெல்லப்பட்டது.

ஆகவே விடுதலைப்புலிகளுடனேயே இந்த போர் இடம்பெற்றது இதில் பொது மக்களும் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தற்பொழுது யுத்தம் இடம்பெற்று 11 ஆண்டுகளை கடந்துள்ள நிலையிலும் அரசாங்கம் இதனை தடை செய்துள்ள நிலையில் மீண்டும் தமிழ் விடுதலைக்காக ஆயுதம் ஏந்தி போடுவதற்கான ஒரு இனமாக தமிழினம் தள்ளப்படப்போகின்றதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. குறிப்பாக அமெரிக்கா, சீனா, இந்தியா தமிழீழ விடுதலைப்புலிகளின் தடையை நீக்குமாக இருந்தால் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் கட்டமைப்பை குறித்த நாடுகளில் கட்டியெழுப்புவதற்கான ஊன்று சக்தியாக அமையும் என்றே கூறலாம். ஆகவே அரசாங்கம் மாவீரர்களை நினைவு கூறுவதற்கான அனுமதியினை வழங்குவதனூடாக அரசியல் ரீதியாக தமிழ் மக்கள் மத்தியில் ஒரு இடத்தை தக்கவைத்துக்கொள்ளலாம் என்பதே இன்றைய நிலைப்பாடு. சர்வதேச மட்டத்திலும் அரசாங்கம் நற்பெயரை பெற்றுக்கொள்ளும் சூழ்நிலை உருவாகும்.

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சீட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 22.11.2020 அன்று வெளியிடப்பட்டது.